# தாரகை



புரட்டாதி - ஐப்பசி 1981

விலை: ரூபா 2-25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For Prompt and Accurate

Dispensing

of Your Prescriptions


VISIT

A&N Chemists.

AMPARA ROAD. AKKARAIPATTU.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பில் புறக்கணிப்பு! விவசாயத்தில் பரிதவிப்பு! அம்பாறை மாவட்டத் தமிழர்களின் அவலநிலை அதிகரிப்பு!



இராணுவத்தினரால் தாக்குண்டு மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அம்பாறை மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு. க. வேல்முருகு அவர்களைச் சந்தித்த போது, அம்பாறைத் தமிழர்களின் அவலநிலைபற்றி அவர் கூறிய கருத்துக்கள் இங்கே இடம்பெறுகிறது.

அம்பாறை மாவட்டம் மற்றைய மாவட்டங்களிலிருந்து வேறுபட்ட ஒன்று. தனித்துவமான தமிழ் பிரதேசமாக இருந்து - அரசாங்கத்தின் ஆக்கிரமிப்புக்கு ஆளாகி குடியேற்ற விளைநிலமாகிய ஒன்று.

பட்டிப்பளை ஆறு என பைந்தமிழில் அழைக்கப்பட்ட இந்த அம்பாறை மாவட்டம் கல்லோயா என்றும் பின்னர் திஹாமடுவெல என்றும் பெயர் மாற்றம் பெற்றுவிட்டது.

முஸ்லிம்களும் தமிழர்களும் இருபத்தைந்து வருடகாலமாக இணைந்து வாழ்ந்த இம் மாவட்டம் தனிச் சிங்கள மாவட்டமாகப் பெயர் பெற்றிருக்றகிது.

இங்கு வாழும் 65 ஆயிரம் தமிழர்களும் அரசியல் பகடக்காயாக — எடுப்பார் கைப்பிள்ளையாக - அரசியல் அனுதையாக முப்பது வருடங்களுக்குமேல் வாழ்ந்துவிட்டனர். தேர்தல் வந்ததும், தமிழர் அதன்பின் உமிழ் நீர்என்ற நிலை இருந்தது. கறிக்குப் போடப்படும் கறிவேப்பிலையாகக் காலம் கழித்தவர்கள் தமிழர்கள். இந்நிலை 1956ம் ஆண்டிலிருந்து ஆரயபித்தது.

எனவே இம்மாவட்டத்திற்கு ஒரு தமிழ் பிரதிநிதித்துவர் தேவை எனற கருத்தை தேர்தல் கமிசன் முன் வைத்தது தமிழர் விடுதலைக் கூட்டணி. அதன் பிரதிபலன் M. C. கனகரெத்தினம் அவர்கள் பொத்துவில் தொகுதிக்கு இரண்டாவது நாடாளுமன்ற உறுப்பினரானுர். எனினும் அதே கிறவல் ரேட்டில் அதே வண்டில் கடகடவென்று ஓடும் அதே காட்சி அவர் இறக்கும்வரை இங்கே இருந்தது.

வேலையில்லா இளைஞர்களின் விரக்தி மனப்பான்மை — தரமிருந்தும் வேலைவாய்ப்பில் திட்டமிட்ட புறக்கணிப்பு — முன்னேற்றமற்ற கிராமங்களின் அவலநிலை - எல்லாவற்றிற்கும் மேலாக குடியிருப்பு நிலங்களினதும் வயல் வெளிகளினதும் திட்டமிட்ட அபகரிப்பு. இந்த மாவட்ட மக்களுக்குத் தொடர்ந்து இருக்கும் பரிதவிப்பு.

மல்வத்தையிலுள்ள வரம்பு வளைந்த வட்டை — மலையடி வட்டை - தொட்டாச்சுருங்கி வட்டை ஆகிய பகுதிகளில் ஏறக்குறைய 2000 ஏக்கருக்கு மேற்பட்டகாணிகள், தமிழர்கள் பரம்பரை பரம்பரையாக வேளாண்மை செய்துவரும் உறுதிக்காணிகள். இந்தக்காணிகளுக்கு பக்கத்திலிருக்கும் புத்த பிக்கு ஒருவர் — இந்தக் காணிகளில் தமிழர்கள் விதைத்த வேளாண்மையை வெட்டக்கூடாது என்று கட்டளையிட்டும் விதைத்த குற்றத்திற்காக 1000/- ரூபாய் பணமும் பெற்றிருந்தார். ஆனுல் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் இவ்விடயத்தில் நேரடியாகத் தலையிட்டதன் காரணத்தினுல் அவர்களுக்கு வேளாண்மை வெட்ட உத்தரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்ததுடன் பெற்ற 1000/- ரூபாவும் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

கல்முனையைப் பொறுத்தவரையில் தமிழர்களுக்குச் சொந்தமான காணிகளிலும் அரசாங்கத்துக்குச் சொந்தமான காணிகளிலும் மற்றொரு சமூகத்தவர் அத்துமீறிக் குடியேறுவது வழக்கமாகிவிட்டது. தமிழர்களின் காணிகள் அரசாங்கத் தேவைக்கெனச் சொல்லி அபகரிக்கப்பட்டுக்கொண்டு வருகிறது. மற்றச் சமூகத்தவர் எவரினதும் காணிகள் இப்படி அபகரிக்கப்பட்டதாக இதுவரையில் இல்லை. இங்குள்ள அரசியல் பிரமுகர்களின் மாற்றான்தாய் மனப்பான்மையே இதற்குக் காரணம்.

இதுமட்டுமா? தொழில் வாய்ப்பு – கல்வி சகலவற்றிலும் புறக்கணிப்பு.

மீன்பிடிக் கடன் 360 லட்சம் அளவில் ஒதுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். இதில் ஒரு தமிழர்க்கும்கூட ஒரு வள்ளம் கொடுக்கப் பட்டதாக இல்லை.

சகல வசதிகளுமடங்கிய ஒரு 1ம் தர தமிழ் பாடசாலை இம்மாவட்டத்தில் இல்லை.

40 வருடங்களுக்கு மேலாக நிரந்தர வியாபாரம் செய்துவரும் தமிழ் பேசும் மக்களுக்கு புதிதாகக் கட்டப்படும் சந்தையில் இடம் இல்லை.

இவற்றை அநியாயம் என்பதா? அக்கிரமம் என்பதா? ஆட்சியாளரின் அலட்சியப் போக்கு என்பதா?

இயற்கையாகப் பெறக்கூடியது தண்ணீர். இதைக்கூடப் பெறுவதற்கு எமக்கு உரிமையில்லையாம். சவளக்கடை - நாவிதன்வெளி - 4ம் கொலனி – 7ம் கொலனி - 11ம் கொலனி - 13ம் கொலனி – 15ம் கொலனி - சொறிக்கல்முனை – வீரச்சோலை - கணபதிபுரம் - புதுநகர் - பொத்துவில் தொகுதியில் இருக்கும் இன்ஸ்பெக்டர் ஏற்றம் வட்டிவழி குண்டுமடுபோன்ற பகுதிகளில் வாழும் மக்கள் இருக்கிறார்களே! அவர்களுடைய கண்ணீரைத்தவிர வேறு எந்தத் தண்ணீரும் அங்கு இல்லை. சேனநாயக்க சமுத்திரத்திலிருந்து பாய்ந்துவரும் தண்ணீர் இரண்டு வாய்க்காலினூடாக வருகிறதாம். ஒன்று சிங்கள வாய்க்கால். மற்றது தமிழ் வாய்க்கால்.

குளிக்க முடியாது - குடிக்க முடியாது - விவசாயம் செய்து பொருளாதாரத்தைப் பெருக்க முடியாது என்று மக்கள் சாய்ந்து கிடக்கின்றார்கள். காரணம் வாய்க்கால் காய்ந்து கிடக்கிறது.

நடந்து முடிந்த மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலின் பிரதிபலன்கள் இவைகள்.

தேர்தல் முடிந்தபின் மாவட்ட முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்புக்கொடுக்கும் அரசியல் நாகரீகம் தெரியவேண்டும். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று கூறும் மனப்பக்குவம் வேண்டும். அப்படித்தான் நான் நடக்கிறேன் பழகுகிறேன்.


என் தாய் மொழியாம் தமிழ் மொழியில் பேசமுடியாவிடில் - என் இனிய இளைஞர்களின் வாழ்வை வளம் பெற்று உயர்த்த முடியாவிடில் - கல்வியில் – பொருளாதாரப் பிரச்சனைகளில் தீர்வுகாண முடியாவிடில் இந்த மாவட்ட அபிவிருத்தி சபையால் என்ன பிரயோசனம்? நான் தொடர்ந்தும் அங்கத்துவம் வகிப்பதில் என்ன அர்த்தம்?

இப்படிக் கூறினார் அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபை தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. கந்தையா வேல்முருகு அவர்கள்.

பேட்டிகண்டவர்:

**"பாண்டியூர் தட்சணா"**

## தேவநேசன் நேசையா



தமிழிலே பற்றும் தமிழ்க்கலைகளிலே ஆர்வமும் கொண்ட திரு. தேவநேசன் நேசையா மீண்டும் தன் சேவையினைத் தமிழ் மக்களுக்கு நல்கிடும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக அவர் மீண்டும் வந்துள்ளமை தமிழ் மக்களுக்குத் தேனாக இனிக்கும் செய்தி. மட்டுநகரில் இவர் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் பிரதேச கலாமன்றம் மூலம் ஆற்றிய கலை இலக்கியப் பணிகளும் அண்ணாவி மாநாடு, கலை இலக்கியக் கண்காட்சி முதலியனவும் இன்றும் நம் மனக்கண்முன் நிற்கின்றன. மழைத்துளிகளை எதிர்நோக்கும் சாதகப்பட்சிபோல் ஏங்கி நின்ற தமிழ் உள்ளங்களுக்கு அமிர்தவர்ஷமாக பொழியும் அவரது சேவை மீண்டும் கிடைத்தது இறைவன் கருணையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் குரல்

''தாரகை'' சஞ்சிகையின் ஊடாக இலை மறைகாய் போல் இருக்கும் இளம் எழுத்தாளர்களின் அறிவையும் ஆற்றலையும் எடுத்துக் காட்டும் ஊக்கம் ஒவ்வோர்பாலும் நிலைத்து உயர்வான சமூக நிலைக்கு இட்டுச்செல்ல வேண்டுவதோடு, வாசகர்களின் கலை - இலக்கிய அறிவையும் வளர்க்க முனைந்த ''தாரகை'' யின் சேவை இடையில் நின்றுவிடாமல் தொடர எனது உளமார வாழ்த்துகிறேன்.

புஷ்பா
திருக்கோணமலை.

நல்ல முயற்சி. துணிவான முயற்சி, தொடர்ந்து செல்லுங்கள், தளர வேண்டாம்.

புதியவர்களுக்கும் போதிய இடம் கொடுங்கள். சமுதாயத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என உண்மையில் நீங்கள் கருதும் ஆக்கங்களைத் துணிந்து பிரசுரம் செய்யுங்கள். அல்லாதவை வேண்டாம்.

கோகிலா - மகேந்திரன்.

ஈழ நாட்டின் இணையற்ற ஏடாய் - எங்கள்
இதய அரங்கத்தில் ஒளிதரு விளக்காய்
புதுமை இலக்கியம் பொங்கிடும் மடலாய் -
இந்தத்
தாரகை தரணியில் நிலைத்திட வேண்டும்.

எஸ். கே. ராஜரட்ணம்.

வானத்தில் ஆயிரம் தாரகைகள்
தோன்றி நிதம் கண் சிமிட்டும்
வரலாறு படைக்கும்! ஆயினும்!
அவைகள் பழங்கதைகள்!

வையத்தின் வளமான வாழ்க்கைக்கு
'இலக்கிய தாரகை' இளமையுடன்
புறப்பட்ட செய்தி
வரலாற்றை தொடக்கிவிடும்
புதிய கதை! புதிய கதை!

செல்வி தேவப்பிரியா
ஹாலி - எல.

தாரகை ஒன்று! தளிர் நடை கொண்டு
பாரினில் நின்று! வைந்தமிழ் சுவையூட்டி,
காரிகையாக காசினிவலம் வந்து
தாரணிபோற்ற, தனித்து வாழ்கவே!

த. வதனன்.

மங்கையு னழகை மூஞ்சையில் ஏற்றி
மிஞ்சிய வழகில் ''தாரகை'' எனுமிச்
சஞ்சிகை கூட பிஞ்சிலே முற்றிடாது,
வஞ்சியே நீ வளர்ந்திட வாழ்த்துக்கள்,

முத்துலிங்கம் மதியழகன்.
கல்முனை.

## மங்கையே நீ மாறிவிடு!

குட்டைக் கவுணணிந்து
குலுக்கியே அங்கங்களை
நட்டநடு வீதிகளில்
நயம்படவே விருந்துவைத்து
மட்டமாய் நினைத்து
மானத்தை விலைபேசி
பட்டமரமாய் நிற்கும்
பாவையே நீ கேளாய்!

கடற்கரை சினிமாவென
கண்டபடி திரிந்தலைந்து
இடத்திற்குத் தகுந்தாற்போல்
எத்தனையோ கோலங்கள்
உடந்தையாய் நீயாக்கி
உருக்குலைந்து வரும்போது
கடந்துதான் நிற்கின்ற
கண்ணியத்தை என்னவென்பேன்!

கண்ணுக்கு மைதீட்டி
கண்ணாடி தானணிந்து
முன்னுக்கும் பின்னுக்குமாய்
முக்காலும் தெரியவிட்டு
கண்ணையா வீட்டிலுள்ள
கழுதையைப்போல் வருமுன்னை
அண்ணார்ந்து பார்க்கவுந்தன்
அப்பனுக்கும் கூசுமடி!

அங்கத்தில் அரைவாசியை
அழகாக ஏலம்வைத்து
பொங்கிடும் உன்னழை
பொறுப்பற்று விற்றுநிற்கும்
தங்கையே உந்தனது
தரமற்ற கொள்கைதான்
எங்குதான் சென்றிடுமோ
எண்ணினால் துக்கமடி!

கண்ணகி வழிவந்த
காரிகையே நீ கொஞ்சம்
புண்ணாக்கி நிற்கின்ற
புரியாத கோலங்களை
திண்ணமாய் நீயுணர்ந்து
திருந்தி விட்டாயானால்
உண்மையில் நீதான் பெண்ணே
உத்தமி என்று சொல்வேன்!

கவிஞர் பதியதளாவ
கே. எம். பாறூக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே பார்வையில்

ஜனாதிபதிக்கும் த. வி. கூட்டணிக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் முதலாவது பிரதிபலன் என்ன தெரியுமா? சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட ஊர்க்காவல் தொண்டர் படையை ஏற்படுத்துவது. ஆனால் இந்த உத்தேச ஊர்க்காவல் படைகள் மாவட்ட சபைகளின் அதிகாரத்துக்குள் அடங்காது என ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் பதிலளித்திருக்கிறார்.

அப்படியானால் இந்த மாவட்ட அபிவிருத்தி என்ற சொல்லை சிமோல் வட்ட அபிவிருத்தி என அழைக்கலாமா?

---

இராணுவத்தில் வேலை பார்ப்பவர்களின் பாடு இப்போது பரவாயில்லை. செல்லும் இடமெல்லாம் சிறப்பு. வரும் இடமெல்லாம் வரவேற்பு. கடமை — கண்ணியம் — கட்டுப்பாட்டுடன் கடமையாற்றியதற்காக அண்மையில் 456 பேருக்கு ஜனாதிபதி பதக்கங்கள் வழங்கப்பட்டிருக்கிறது. இவர்களில் தமிழர்கள் 17 பேர். முஸ்லிம்கள் 4 பேர். வளரட்டும் அவர்கள் தொண்டு.

---

13-4-1901ல் பிறந்த டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா அவர்கள் சமதர்மக் கொள்கையின் அடிப்படையில் கம்யூனிசியத்தைக் கட்டி எழுப்பி அதன்மூலம் ஏழை மக்களின் இதயங்களில் தனி ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்டவர். தமிழ் மக்களின் பிரச்சினைகளை முழு மனதோடு உணர்ந்து அதனைச் சிங்கள மக்களுக்கு எடுத்து ஓதியவர். அன்னார் தனது எண்பதாவது வயதில் 28-8-81 அன்று மாஸ்கோவில் காலமானார். எங்கள் மலர் அஞ்சலி சமர்ப்பணமாகட்டும்.

இந்தியாவிலுள்ள சீக்கியர்கள் தங்களுக்கு காலிஸ்தான் என்ற ஒரு தனி நாட்டைக் கோருகிறார்கள். இந்தக் கோரிக்கையை எதிர்த்த பஞ்சாபிய செய்திப் பத்திரிகை ஆசிரியர் ஒருவர் கொலை செய்யப்பட்டார். இதை அடுத்த சீக்கிய மதத் தலைவர் ஜர்னல்சிங் பிந்திர்வாலா கைது செய்யப்பட்டார். பூகம்பம் வெடித்தது. வன்செயல் தொடர்ந்தது. புதுடில்லியிலிருந்து ஸ்ரீநகரம் புறப்பட்ட இந்தியன் எயார்லைன்ஸின் விமானம் ஒன்று காலிஸ்தான் கோரும் இருவரால் கடத்தப்பட்டது. ஆனால் துரதிட்டமாக லாகூரில் இறக்கியதும் பாகிஸ்தானிய கமாண்டக்களினால் மடக்கிப் பிடிக்கப்பட்டது பாவம்! தனி நாடு கோருபவர்க்கு தடங்கல்தான் எத்தனை?

---

அரேபிய நாடுகளில் எண்ணெய் கிணறுகள் இருக்கும் இடங்களில் காணப்படும் சுண்ணாம்புக்கல்லை ஒத்த கல் இலங்கையிலும் மன்னார் - காங்கேசன்துறை - அம்பாந்தோட்டை - புத்தளம் ஆகிய பிரதேசங்களில் காணப்படுகிறதாம். அதனால்தான் எண்ணெய் பெறமுயும் என்ற நம்பிக்கை உருவாகியதாம். எனவேதான் கடந்தகால அரசு சோவியத் யூனியனின் உதவியுடன் பேசாலையில் மூன்று முறை தோண்டியது. தற்போதுகூட அமெரிக்க சிட்கோ நிறுவனத் திடம் செய்துகொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தத்தின்படி மீண்டும் எண்ணெய் தோண்டும் படலம் மன்னார் குடாவுக்கு அப்பால் 10 மைல் தொலைவிலுள்ள ஆழ்கடலில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் இந்த எண்ணெய் ஒழித்துக்கொள்கிறது.

முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலய உற்சவத்தின்போது கடலிற்குள் சென்று குடத்தில் எடுத்துக்கொண்டு வரும் கடல் நீர் அந்த ஆலய விளக்கில் எரியமுடிகிறது. இங்கே பணத்தைச் செலவுசெய்து தோண்டும்போது எண்ணெய் வரமறுக்கிறது. உடையவன் எடுத்தால் வருகிறது. அடுத்தவன் தொட்டால் மறைகிறது. ஆண்டவன் செயலை எப்படி வர்ணிப்பது?

---

தமிழ் நாட்டிலிருந்து கேரளாவுக்கு எரிசாராயம் கடத்தியதில் 35 கோடிக்கு ஊழல் நடைபெற்றிருக்கிறது. இதன் பின்னணியில் முதல்வர் எம். ஜி. ஆர். இருந்திருக்கிறார். விசாரணைக் கமிசன் ஒன்றை முன்னாள் ஒரிசா மேல் நீதிமன்ற நீதிபதி ரே தலைமையில் மத்திய அரசு நியமித்துள்ளது. ஆறு மாத காலத்தில் அறிக்கை அரசுக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டுமாம். இப்போது விசாரணை டில்லியிலுள்ள லோக் நாயக பவனின் 9வது மாடியில் நடைபெறுகிறது. எம். ஜி. ஆர். படைக்கும் புரட்சியை ஆறு மாதத்தால் பார்ப்போம்.

---

தமிழகத்தில் தமிழ் பழங்கலை இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பழந்தமிழ் நூல்களை மீண்டும் பதிப்பித்து வெளியிடுதல் - உத்தேச தமிழ் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான உதவிகளை வழங்கல்-உலகத் தமிழாராய்ச்சி மகா நாட்டில் அறிவிக்கப்பட்ட தமிழ் சங்கம் நிறுவுவதில் உதவி புரிதல் ஆகியன இந்த இயக்கத்தின் கடமைகள். முன்னால் கல்கி ஆசிரியரான மீ. பா. சோமசுந்தரம் (சோமு) அவர்கள் இதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். வாழ்க தமிழ்! வளர்க அவன் சிறப்பு.

— கடோட்கஜன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரகை

புரட்டாதி – ஐப்பசி 1981

41, பயனியர் வீதி,
மட்டக்களப்பு.

# ஒரு முக்கிய வேண்டுகோள்

இம்மாதம் 31ம் திகதி மட்டக்களப்பு புகையிரத நிலையத் திறப்பு விழா மிக விமர்சையாக நடைபெறவிருக்கின்றது.

பழைய கட்டிடத்தை இடித்துத் தள்ளிவிட்டு புத்தம் புதுப் பாணியில் யாழ்ப்பாணத்துப் புகையிரத நிலையத்துக்குச் சவால் விடும் பாணியில் அறுபது லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது இக்கட்டிடம்; பாராட்டுகிறோம்.

வெளிநாட்டிலிருந்து வரும் வெள்ளைக்காரர்கள் புகையிரதத்தை விட்டு இறங்கியதும் அவர்களது ஐம்பொறிகளையும் சுண்டியிழுக்கும் விதத்தில் அலங்கார சோடனைகளுடன் கட்டப்பட்டிருக்கிறது இக்கட்டிடம்; போற்றுகிறோம்.

ஒரு நல்லையாவுக்குப் பிறகு – ஒரு இராஜன் செல்வநாயகத்துக்குப் பிறகு மட்டக்களப்பு மண்மீது தீராத காதல் வைத்திருக்கும் எங்கள் அமைச்சர்களின் இடைவிடாத கடின உழைப்பினால் இந்த மட்டக்களப்பு மண் மீண்டும் ஒரு புதுப்பொழிவு பெறுகிறது; வரவேற்கிறோம்.

ஆனால் இந்த மங்களகரமான வேளையில் மட்டக்களப்பு மக்கள் மனதில் அடங்கிக்கிடக்கும் ஒரு புழுக்கத்தை – அவர்களைப்பற்றி நிற்கும் ஒரு ஏக்கத்தை இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

மட்டக்களப்பிலுள்ள அநேகமான பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களுக்குக் கல்வி போதிப்பவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள். இங்குள்ள பெரிய பெரிய உத்தியோகங்களை வகிப்பவர்களும் அவர்களே! மட்டக்களப்பின் அபிவிருத்தியிலும் சரி கல்வியிலும் சரி அளப்பெரிய தொண்டு புரிபவர்கள் அவர்கள். அப்படிப்பட்டவர்கட்கு போக்குவரத்தில் எந்த அசௌகரியங்களும் இருக்கக்கூடாது.

ஆமாம் மட்டக்களப்பு – யாழ்ப்பாணப் பிரயாணம் சௌகரியமாக இல்லை. ஒன்றரை நாள் தேவைப்படுகிறது. இரண்டு புகையிரதங்கள் ஏறி இறங்க வேண்டும். இடையில் மூன்று மணித்தியாலம் – அதுவும் காலநிலை பிழையானதென்றால் உயிரைக் கையில் பிடித்தபடி மாகோச் சந்தியில் காத்திருக்கும் மூட்டைப்பூச்சிக்கு ரத்தம் கொடுக்கவேண்டும்.

மூட்டை முடிச்சுக்களுடன் மூன்று பிள்ளைகளுடனும் யாழ்ப்பாணம் புறப்படும் ஒரு கணவன் மனைவியினால் இந்தப் பிரயாணத்தை நினைத்துப் பார்க்கமுடியுமா?

வியாபாரிகளின் நன்மை கருதி மட்டக்களப்பு – கொழும்புக்கு ஒரு ஹிஜ்ரா ஓடமுடியுமானால் மட்டக்களப்பு மக்களின் நன்மை கருதி மட்டக்களப்பு யாழ்ப்பாணத்துக்கு ஏன் ஒரு தனிப் புகையிரதம் ஓடமுடியாது?

பட்டினியோடு போய் படம் பார்த்துவந்த கதை எங்கள் கதை!

எனவே மட்டக்களப்பை அலங்கரிக்கும் இந்தப் புகையிரத நிலையத்தைத் திறந்த கையோடு மட்டக்களப்பு – யாழ்ப்பாணத்துக்கு ஒரு தனிப் புகையிரதம் ஒன்றை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்புகளாகும்.

சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புறமோசன்

எஸ். கே. விக்னேஸ்வரன்

சண்முகம் போனபோது பத்துப் பதினைந்து பேர் கொண்ட ஒரு 'சின்னக் கியூ' தான் நின்றது. வீட்டிலிருந்து கால்நடையாக 'விறுவிறெண்டு' வந்கதில் வியர்த்து விட்ட வியர்வையை, வேட்டித் தலைப்பை உயர்த்தி முகத்திலும் பின் கழுத்திலுமாகத் துடைத்துக்கொண்டு தானும் ஒருவனாகக் கியூவில் சேர்ந்து கொண்டான் அவன்.

முன்னால் ஒவ்வொருவராகக் குறைந்து குறைந்து கியூவில் அவன் முன்னேக்கிப் போய்க்கொண்டிருக்கும்போது திரும்பிப் பார்த்தான்.

அநுமார் வாலாக அந்தக் 'கியூ' நீண்டிருந்தது. அதில் நிற்கும் மனிதர்களை ஒருவகை வியப்புடனும் - அந்த வியப்புடன் கலந்த ஒரு எரிச்சல் உணர்வுடனும் பார்த்தபடி முன்னேறினான் அவன்.

இவனது முறை...

'அடையாள அட்டை வந்திட்டுதோ?'

''பேரென்ன?''

''மூனாச் சண்முகம்''

''இல்லை... அடுத்தாள்''

சட்டென்று கிடைத்த பதிலினால் இயல்பாகவே எழுந்த சந்தேகத்துடன் கௌண்டரில் வைத்த கையை எடுக்காமலே நின்றான் சண்முகம்.

''இல்லை, உம்மடை பேரில்லை, போகலாம்... மற்றாள்...''

''என்ன ஐயா... எனக்குப் பிறகு பதிஞ்சவைக்கெல்லாம் வந்திட்டுது... எனக்கு வரேல்லையெண்டால்...''

'' வரேல்லையெண்டால் பிறகென்ன நான் சரிக்கட்டிறதே... உம்! போப்பா.. போ அங்காலை... பெரிய கரைச்சலப்பா இது.. இஞ்சை கொண்டந்து போட்டாங்களே என்ன...''

அந்தச் சீறலுடனேயே தனது அதிருப்தியை வெளியிடுவதுபோல கொலரைத் தனது இருகைகளாலும் இழுத்து நிமிர்த்திவிட்டு முகத்தைச் சுளித்துக்கொண்டார் அந்த அலுவலர்.

சண்முகம் தயங்கித் தயங்கி வெளியே வந்தான். கியூவில் நின்றவர்கள் அவனை ஏளனமாகப் பார்ப்பதையும், அவனுக்குப் பின்னால் நின்றவர், அந்த அலுவலரின் மனதில் தன்னை விசயந்தெரிந்தவராக உயர்த்திக்கொள்வதற்காக அவனைப்பற்றி விமர்சிப்பதையும் அவன் குறுகுறுப்புடன் உணர்ந்தான். இருவரும் ஏதோ குசுகுசுக்க, அவர் சிரித்தபடி அவனைப்பார்த்து விட்டு அவரிடம் ஏதோ சொல்ல, அதனால் அவர் பலத்துச் சிரிக்க... இந்தச் சிரிப்பு அப்படியே கியூவின் பின்னால் பரவ, அதன்பின் அவர் அடை

யாள அட்டையும் புன்னகையுமாக விலக...

'ம்... அடுத்தாள்...'

சண்முகம் அதிலே நிற்கப் பிடிக்காமல் வெளிப்புறமாக நடந்தான்...

ஒரு மாதகாலமாக அடையாள அட்டைக்கு அப்பிளிக்கேசன் கொடுத்துவிட்டு அதைப் பெற இந்த ஏ.பீ.சீ. கட்டிடத்திற்கு நாயாக அலைகிறான் இவன்.

அந்தப் பிரமாண்டமான சிவப்புக் காவிக்கட்டிடத்தின் முன்வாசல் வழியாக வெளியே வந்தான். வரிசை வரிசையாக சைக்கிள்களும் ஒருசில ஸ்கூட்டர்களும் இரண்டொரு காரும்கூட...

நீண்டு வளைந்த, தூரத்துப் பனைக்கூடலுக்கு மேலாகி எறிக்கின்ற சூரியனின் தாகிப்பினைச் சகிக்கமாட்டாமல் துவாயை, கொப்பியை, பையை தலைக்கு மறைவாகப் பிடித்தபடி நிற்கும் அந்தக் கியூவினைப் பார்த்தபடி அவன் நடந்தான்...

'இத்தனை பேர் வந்திருக்கிறாங்களே... இத்தனைபேரும் கடனெடுக்கப் போறாங்களோ...? இவ்வளவு பேரும் தோட்டம் செய்யிறவங்களோ...?'

சண்முகத்திற்கு சிந்தனையூடே 'தோட்டம் செய்யாதவர்களும், விவசாயமென்டா என்னெண்டு தெரியாதவர்களும் கடனெடுக்கப் போறாங்கள்' என்ற உண்மை உறைக்கவே, தன் மீதே கோபம் கோபமாக வந்தது. 'சீ... என்ன முச்சினியங்கெட்ட பிறப்பு நான். என்ன செய்தாலும் எதுக்கு வெளிக்கிட்டாலும் இப்பிடித்தான்...'

ரோட்டில் ஏறி வீதியின் ஓரப்பக்கமாக ஒதுங்கிக்கொண்டிருக்கும் வேலிப்பூவரச மரங்களின் நிழலினூடாக 'ஸ்... ஸ்... என்ன வெய்யிலடா' என்ற முணுமுணுப்புடன் நடந்துகொண்டிருந்தான் சண்முகம். தூரத்தே இந்தக் காலை வெய்யிலிலும் ஆஸ்பத்திக் கடைக்கங்காலு முடக்கடியிலை தண்ணி ஓடுறதுபோலை' ரோட்டில் பளபளப்பதை இவன் கவனித்ததாகத் தெரியவில்லை.

'என்னடா சண்முகம்... அழுதுகொண்டு போறாய்...' பின்னாலிருந்து சிரிப்போடு கலந்த கேள்வியுடன் சைக்கிள் பிறேக்கைப் பிடித்து அழுத்திய கோபாலைக் கண்டபோது உண்மையாகவே சண்முகத்துக்கு அழுகை வந்துவிடும் போலத்தான் இருந்தது.

''இண்டைக்கும் 'அயிடென்ரிக்காட்' வரயில்லையாம்''

கோபால் சிரித்தான். எதற்கெடுத்தாலும் அவன் இப்படியே சிரிப்பது வழக்கம். மூன்று மாதத்திற்கு முன் வீட்டிலே களவு போனபோதும், போனகிழமை வீட்டுப்பத்திக்குள் கிடந்த கைவிளக்கு தட்டுப்பட்டு வீடே எரிந்தபோதும் அதைப்பற்றிப் பேசும்போதும் இவன் இப்பிடித்தான் அசாதாரணமாய் சிரித்தான். ஆனால் இப்போது இவன் சிரிப்பைச் சண்முகத்தால் ரசிகக முடியவில்லை.

கோபால் சொன்னான், ''எட என்னடா நீ... விசயந் தெரியாதவனாயிருக்கிறாய் எட... சண்முகம... உங்கையென்ன உதெல்லாம் ஒழுங்கிலையே நடக்குது? அப்பிளிக்கேசன் குடுத்த ஒழுங்கிலை தரஆ...? அண்டைக்கு உன்ரை தோட்டத்துக்குப் பக்கத்துத் தோட்டத்து முத்தையனுக்களும் அயிடென்ரிக் காட் எடுத்தவங்கள்தானே... ஆரேபீஜயோவோ என்னவோலாம் அவன்ரை வீட்டைபோய் அப்பிளிக்கேசன்கூட குடாமல் எல்லாம் உடனை செய்விச்சிட்டாங்கள். எல்லாத்துக்கும் கொஞ்சம் இது வேணும் இது' கைவிரல்களைச் சொடுக்கிக் காட்டிச் சிரித்துக்கொண்டு கோபால் சொன்னது ஏற்கனவே சண்முகம் அறிந்தது தான். ஆனால்தான் இன்று அவரிடம் 'ஞாயம்' கதைத்தான்.

ஆனாலும் என்ன நடந்துவிட்டது? அவன் கேலிக்குள்ளானதை தவிர....

சண்முகத்திற்கு உள்ளம் பொங்கி எழுந்தது. யார்மீது காட்டுவது என்று தெரியாத கோபம் அவனுக்கு.

அவன் வேகமாக நடந்தான். இப்போது தார் ரோட்டு அவனுக்குச் சுடவில்லை.

❋ ❋ ❋

பச்சைப் பசேலென்று வளர்ந்து நின்றன மிளகாய்ச் செடிகள். அவனது ஆத்மார்த்தமான பராமரிப்பில் மதமதத்து நின்ற அவை ஒரு இளம் குமரிக்குரிய குளுகுளுப்புடன் காற்றில் அசைந்தாடியது இவனுக்கு வேதனையையே கொடுத்தது. கன்றுகள் இன்னும் சில நாட்களில் அரும்பு கட்டிவிடும். அந்தக் கரும்பச்சை இலைகளின் பளபளப்பு, இவனுடன் ஏதோ பேசிப் பறைய முயல்வதுபோல இவனுக்குத் தோன்றியது. 'ம்' எத்தினை நாளைக்கெண்டு கையால் இறைக்க... கண்டுகளும் நல்லா வளந்திட்டுது.. இனி பட்டையோடை உள்ளை போகேலாது... நாலைஞ்சு நாளைக்குள்ளை கொத்திக்கட்டோணும். கொஞ்சக் கண்டேகையாலையெண்டாலும் சமாளிக்க... ரண்டாயிரம் கண்டுக்கும் இறைக்கிறதெண்டால்..' எண்ண ஓட்டம் முடிவில் மிஷின் வாங்குவதென்ற எண்ணத்திலும் அதைத் தொடர்ந்தும் 'லோனெ'டுக்கிற விசயத்திலும் வந்து நிற்கவே இவனுக்கு மனம் கனத்தது.

பக்கத்துத் தோட்டத்தில் மிஷின் இறைக்கும் 'குடுகுடு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற இயந்திர ஒலி இவனுக்குக் கேட்கிறது. 'அவங்களுக்கென்ன... ஐந்நூறு கண்டுக்கிறைக்கும் மிஷின் வைச்சு இறைக்கிறாங்கள்... நான்...' என்ற எண்ணம் சட்டென எனக்கும் மிஷின் வந்திட்டுதெண்டால் என்ற இனிப்பான அசைபோடலில் புகுந்தபோது அந்தர் அந்தராக நெறுத்துச் செத்தல் மிளகாய்களை கொடுத்துவிட்டு புத்தம்புதிய நூறு ரூபாய் நோட்டுகளை துப்பலைத் தொட்டு எண்ணுவது போன்ற ஒரு இனிய கற்பனை மனதில் விரிந்து...

ம்! வெறும் பெருமூச்சுத்தான் வெளியாக வந்தது. வீடு நோக்கி நடந்தான் சண்முகம்.

ஏ. பி. சி. அரசாங்கம் விவசாயத்திற்கு வங்கிக்கடனை அளிக்கிறது என்ற விளம்பரம் போடப்பட்டிருந்தபோது முதன்முதலாக ஓடிப்போய் விபரம் விசாரித்தவன் சண்முகம்தான். ஏ.பி.சி.யில் அப்பிளிக்கேசன் கொடுத்து, கமக்காரராக கமத்தொழில் திணைக்களத்தில் பதிவுசெய்து, கமத்தொழில் திணைக்களத்தால் வளங்கப்படும் அடையாள அட்டையை பெற்று, விவசாயம் பெருக்கக் குழுவின் சிபாரிசுடன் வங்கியில் கடனெடுக்கலாம் என்று அறிந்து முதன் முதலாக 'அயிடென்றிக்' காட்டிற்கு அப்பிளிக்கேசனும் எழுதிக்கொடுத்தவன் இவன்தான்.

'உஸ்... எப்ப குடுத்த அப்பிளிக்கேசன்... 'அயிடென்றிக்காட்' இல்லாமல் கடனெடுக்க முடியாது. கடனெடுத்து மிஷின் வாங்கலாமெண்ட நம்பிக்கையிலை எனக்க மிளகாய் கண்டுகளையும் வைச்சிட்டன். தங்கச்சி கமலத்தின்ரை சங்கிலியை அடைவு வைச்சு நட்டது. அவளும் பாவம்... நேற்று வெறுங்கழுத்தோடை கோயிலுக்குப் போனாள்' சிந்தனையோடே அவனும் நடந்துகொண்டிருந்தபோது றோட்டோரமாக கிறீச்சிட்ட பிரேக் கொலியுடன் நின்ற காரினால் அவன் சிந்தனை தடைப்பட்டது. அந்தக் கார் அவன் பின்புறமாக வந்து நிறுத்தப்பட்டபோதுதான் கவனித்தான். 'கடைக்காரச் சின்னத்தம்பி முதலாளின்ரை கார். வெள்ளன ஏ.பி.சியடியிலை நிண்டதெல்லே'

''என்ன தம்பி... அயிடென்றிக்காட் கிடைச்சுதோடாமோனை''

அவரது கேள்வி அவனுக்கு மெல்லிய வியப்பையூட்டியது. அவர் தன்னுடன் அயிடென்றிக்காட் விசயமாகப் பேசுவது' அவனுக்கு அளித்த வியப்பு அவனுக்குப் பதில் சொல்வதைக்கூட தடுத்துவிட்டது.

''நான் உன்னை அங்கை ஒப்பீசடியிலை கண்டனான். அதுதான் கேக்கிறன், என்னவாம்? அவரே திரும்பவும் கேட்டார்.

இவன் நடந்ததைச் சொன்னான்.

''த்சொ... த்சொ... ஓந் தம்பி உவங்கள் உப்பிடித்தான். நான் பாரன் கடையை மோனோடை விட்டிட்டுவந்து ஒரு எண்ணாயிரம் எடுக்கிறதுக்கு ஓடித்திரிஞ்ச கார்ப் பெற்றோலுக்கும் தேத்தண்ணிக்கும் சிலவளிச்ச காசு காணும் ஒரு மாதச் சீவியத்துக்கு'

சண்முகம் ஒரு நூதனமான மனநிலையுடன் அவரைப் பார்த்தான். விவசாயக் கடனை எடுத்த கெட்டிக்காரத் தனத்தைப்பற்றி அவர் சொன்னது அவனுக்கு மெல்லிய எரிச்சலைக் கொடுத்தது எனினும் அவர் அவனை அவ்வளவு அக்கறையாக விசாரித்ததனால் அவனுக்கு கவலை கொஞ்சம் குறையத்தான் செய்தது.

முதலாளி சொன்னார்: தம்பி... மிசினெடுக்கவெண்டு தானே கடனுக்கு அந்தரப்படுகிறாய்.. வேணுமெண்டால் நான் தாறன் வா'' சொன்னபடி அவர் கார்க்கதவைத் திறந்து அவனை ஏறச்சொன்னபோது அவன் கனவோ என்று ஒரு கணம் சந்தேகப்படத்தான் செய்தான். இவர் இப்படி ஏன் வலியவந்து உதவ வேணும் என்ற எண்ணம் அவனுக்கு எளமுதலே கடன் கிடைக்கிறது என்ற குதூகல உணர்வு மனதை வியாபிக்க காரில் ஏறினான் சண்முகம்.

ஏதோ அதிசயம் நடந்துவிட்டதாக – கடவுளே மனிதனாக வந்து உதவிசெய்வதாக ஒரு பிரமிப்பு உணர்வு அவனுக்கு.

அவர் சொன்னார்! ''உனக்குத் தெரியாது தம்பி.... நானிந்த லோனெடுக்கப்பட்ட பாடு. உங்கை அயிடென்றிக்காட் வாங்கி விவசாயக் குழுத்தலைவரிட்டைப் போய் அவருக்கு அதை இதைக் குடுத்து ஆளை ஒருமாதிரிச் சரிப்பண்ணி பாங்கிலைபோய் காசெடுக்கிறதெண்டால் இமயவேதினை. அதுக்கிடையிலை ஒரு பிள்ளைப் பெத்துக் கலியாணம் செய்து வைச்சிடலாம்' என்று சொல்லித் தனது பகிடிக்காக தானே சிரித்துக்கொண்டார் முதலாளி.

இவனுக்கும் அவர் சொல்வது சரியாகவேபட்டது:

'இவருக்கே இவ்வளவு கரச்சலெண்டால் எங்கள் தரவளியள் எடுக்கிறதெண்டால்'

❖ ❖ ❖

கடன் பத்திரத்தைப் பூர்த்திசெய்து அதை அவனிடம் கொடுத்தார் முதலாளி.

'தம்பி மூவாயிரம் போட்டிருக்கிறன், போதுந்தானே.. இதிலை இந்த முத்திரையிலை கையெழுத்தைப் போடன்... இப்படாமோனை ஊருக்கை வட்டி ஐந்து சதம் நடக்குது நான் உனக்கு மூண்டு சதமாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிருக்கிறன். நீயும் நல்லாயிருந்தால் சொல்லமாட்டியே நாளைக்கு...'

சுருக்கென்று இதயத்துள் ஏதோ தைத்தது போல திடுக்கிட்டு எழுந்தான் சண்முகம். அவரை நம்பிக் காரில் ஏறிவந்ததற்காக ஒரு கணம் உண்மையாக வெட்கப்பட்டான் சண்முகம். மனதில் பொங்கிய ஆத்திரத்துடன் அவரை நிமிர்ந்து பார்த்தான்.

அரசாங்கம் ஏழை விவசாயிகளுக்கெண்டு ஒரு சத வட்டிக்கு குடுக்கிற கடனிலே தோட்டம் எண்டா என்னெண்டு தெரியாத நீங்கள் கடனெடுத்தது மட்டுமில்லாமல் அதை நாலு சத வட்டிக்கு குடுத்து பிஸினெஸ் செய்யிறியள் பிஸினெஸ் தூ...'

ஒரு கணம் மனதில் இப்படிக் கேட்டு கடன் பத்திரத்தினை மூஞ்சியில் எறிந்துவிட நினைத்தது அவன் மனம்.

ஆனால் காற்றில் ஆடிப்படபடக்கும் அந்தப் பசியமதாளித்த இலைகளின் கெஞ்சல் போன்ற அசைவு...

சண்முகம் பிரமையிலிருந்து விடுபட்டு கையெழுத்தைப் போட்டுக் கொடுத்துவிட்டு வீடுநோக்கி நடந்தான்.

✥ ✥ ✥

ஒரு வாரம்கூட ஆகவில்லை.

அதற்குள் சண்முகம் காசைத் திருப்பிக் கொண்டுவந்து ஒரு வாரத்திற்கான வட்டியையும் சேர்த்து நீட்டியபோது முதலாளி கொஞ்சம் திகைத்துத்தான் போனர்.

என்ன அதுக்கிடேலே... எங்காலே காசு? அவரால் கேட்காமல் இருக்கவும் முடியவில்லை.

''நானும் கடன் எடுத்திட்டன். ஏதோ கொஞ்சம் சிலவுதான். உதுகளைப் பாத்தால் சரிவருமே'' இதை சொல்லும்போது அவரைப் பழிவாங்கிவிட்டது போன்ற ஒரு உணர்வு. மனதில் ஏதோ ஒரு திருப்தி நிலவுவதுபோல.

✥

---

ஒருத்தி: உன்னுடைய கல்யாணக் காட் எனக்கேன் அனுப்பவில்லை.

மற்றவள்: மற்றமுறை கட்டாயம் அனுப்பி வைக்கிறேன்.

ஒருத்தி: ?...... ?...... ?......

— கரவெட்டி சிவா

---

# அழகுக் குறிப்புகள்

1. மிகவும் உயரமான பெண்கள் மிகவும் உயரமான கொண்டை கட்டக்கூடாது. சிறிது குள்ளமான பெண்கள் கொண்டையை சிறிது கூர்மையாகவும் உயரமாகவும் கட்டிக்கொள்வது நலம். மிகவும் வட்டமான முகம் உள்ளவர்களும் சிறிது உயரமான கொண்டை கட்டிக்கொள்ளலாம்.
2. தேங்காய் எண்ணெயில் மஞ்சள் தூளைப் போட்டுக் குழைத்து உடம்பிற்குத் தடவி பயத்த மாவு தேய்த்துக் குளித்தால் தோல் பளபளப்பாகவும் மிருதுவாகவும் வரும்.
3. குளித்தவுடன் உங்கள் உடல் முழுவதும் சிறிது பவுடர் போட்டுக்கொண்டால் புத்துணர்ச்சி அதிகரிக்கும். குளிர் காலங்களில் இச்செயல் மிகவும் பயன் அளிக்கும்.
4. கவர்ச்சியான முகம் வேண்டுமா? சிறிது கடலை மாவை பால் ஏடுடன் குழைத்து வைத்துக்கொள்ளுங்கள். இதை தினமும் இரவு படுக்கப் போகுமுன் முகத்தில் தடவித் தேய்த்து விடுங்கள். இவ்வாறு தினமும் செய்தால் நாளடைவில் பருக்கள் மறைந்துவிடும். கரும்புள்ளிகள் மறைந்துவிடும்.
5. தூங்கும்போது மேக்கப்புடன் தூங்கக்கூடாது. முகத்தைச் சோப்பு போட்டு நன்கு கழுவவேண்டும்.
6. உங்கள் முகத்தில் தோல் உரிந்தால் அதைப் போக்க சிறிது கிளிசரின், எலுமிச்சை பழச்சாறு, சர்க்கரை இவற்றைக் கலந்து நன்கு தடவுங்கள். உரிந்த தோலும் வந்துவிடும். இவ்வாறு மாதம் ஒரு முறை செய்தால் தோலே உரியாது.

செல்வி மங்களேஸ்வரி நடராசா
கல்முனை – 3.

---

அத்திப்பழம் அத்திக்காய் ஆகியவைகளைப் பெண்கள் அடிக்கடி சாப்பிடவேண்டும். அத்திக்காயைச் சமையல் செய்து சாப்பிட அத்திக்காயும் அத்திப்பழமும் பெண்களின் சூதக சம்பந்தமான கோளாறுகளைக் குணமாக்குகின்றன.

கல்கண்டு 4-5-72

உருளைக் கிழங்கு வேகவைத்த வெந்நீரைக் கொட்டி விடாதீர்கள். வெள்ளி, எவர்சில்வர் பாத்திரங்கள்மீது இதை விட்டுத் தேய்த்தால் பளிச்சென்று ஆகும்.

கூந்தலில் பேன் இருந்தால் படுக்கும் தலையணையின்மீது கொஞ்சம் துளசி இலைகளைப் போட்டுக்கொண்டு தூங்குங்கள். அவை கூந்தலை விட்டு ஓடிவிடும்.

ஆனந்த விகடன் 30-6-74



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணங்கள்

"இல்லறமல்லது நல்லறமன்று" இல்லற வாழ்க்கையில் வாழ்வாங்குவாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவதற்கு உறுதுணை செய்வது, இல்லறமென்னும் நல்லறமேயாம்.

இல்லறமென்னும் நல்லறம் எல்லோருக்கும் எளிதில் கிடைத்துவிடுமா? என்ருல், அது தான் இல்லை. ஒருசிலர் உரியகாலத்தில்-பருவ வயதில் இல்லற வாழ்வில் திளைத்திட, ஏனையோர் எட்டாக் கனியாக, எதிர்பார்த்து ஏங்கியேங்கி வழ்நாளை வீண்நாளாக்கிக் கொண்டிருப்பதையும் நாம் காணக்கூடியதாக இருக்கிறது. ஏன் இந்த வேறுபாடு. இதற்கு சோதிட சாத்திரம் மூலம்தான் விடைகாண முடியும்.

ஜெனனம் என்பது நாம் முன்செய்த இருவினைகளின் பயனுக உள்ளது. இருவினைகளான நல்வினை, தீவினைகளின் பயனுகத்தான் ஒவ்வொருவருடைய வாழ்விலும், இன்பமும்-துன்பமும், வாழ்வும், தாழ்வும் ஏற்படுகின்றன, ஏற்பட்டுக்கொண்டே வருகின்றன என்பது முற்றும் துறந்த - முக்காலங்களும் உணர்ந்த முனிபுங்கவர்களின் அருள் வாக்காகும். இதனை நமக்கு உணர்த்துவன அண்டவெளியில் சூரியபகவானை மையமாகக்கொண்டு சூரிய பகவானின் சக்திக்குட்பட்டுச் சுற்றிக் கொண்டு வரும் சந்திரன் செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி போன்ற கிரகங்களாகும்.

அண்டவெளியில் சுற்றிக்கொண்டு வரும் இக்கிரகங்களால் பூமியும் பூமியில் வாழும் உயிரினங்களும், பற்பல தாக்கங்களுக்குட்படுத்தப் படுகின்றன வென்பதை முற்றும் உணர்ந்த முனிவர்கள் மாத்திரமல்ல, விஞ்ஞான மேதைகளும் கண்டறிந்த உண்மையாகும். இதனை அவரவர் ஜெனன காலத்தின்போது காணப்படும் கிரகநிலையைக்கொண்டு அறிந்து கொள்ளமுடியுமானதால் - திருமண வாழ்க்கை பற்றியும் திட்டவட்டமாக அறிந்துகொள்ள முடியுமென்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

எனவே —

# தாமதமாவது

கிரகாதிபர்களின் நிலையைக்கொண்டு, சிலருக்கு இளம் வயதில் திருமணம் நடைபெறுவதும். சிலருக்கு உரிய வயது கடந்து திருமணம் நடைபெறுவதும், சிலர் திருமணமே யாகாமலிருப்பதும் ஏன் என்பதை அறிந்து கொள்ளலாம்.

திருமணம் நடைபெறுவதற்கு குருபகவான் இலக்கனத்திலோ? புத்திரகானத்திலோ? களத்திரத் தானத்திலோ? அன்றேல் பாக்கியத் தானத்திலோ? வரும் காலம் திருமணம் நடைபெறும், எனப் பொதுவாகச் சொல்லப்படுகிறது. அது எவ்வளவு உண்மை என்பதை கிரகநிலையை அவதானித்தவர்கள் அறிந்திருப்பர். ''காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த கதை மாதிரி'' ஒன்றிரண்டு திருமணங்கள் நடந்திருக்கலாம். அதற்காக எல்லோருக்கும். திருமணம் நடைபெறும் என்று சொல்லமுடியாதல்லவா? காகமிருக்கப் பனம்பழம் விழுந்த கதைதான்.

இலக்கினுதிபதியும், குடும்பத்தானுதிபதியாகிய 2ம் இடத்ததிபதியும், களத்திரத் தானமான 7ம் இடத்ததிபதியுமாகிய மூவரும் கூடி. மறைவுத்தானங்களாகிய 6, 8, 12ம் இடங்களில், பகை நீசம் முதலிய தோஷங்




இம்மாதம் அட்டைப் படத்தை அலங்கரிக்கும் செல்வி குமுதினி இராஜரெட்ணம் அவர்களின் மற்றொரு அபிநயத் தோற்றம் இது. இவர் தற்போது மட்டுநகர் வின்சன்ற் மகளிர் பாடசாலையில் க. பொ. த. உயர்தர வகுப்பில் கல்வி பயின்றுகொண்டு வருகிருர். அடையார் கே. லஷ்மனின் சிஷ்யையாகிய மட்டக்களப்பு தாமரைக்கேணியைச் சேர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் இருப்பவர்கள் திருமண வாழ்வைப் பற்றி சிந்திக்கவேண்டிய அவசியமேயில்லே. என்றும் பிரமச்சாரிகளாயிருக்கவேண்டியது தான்.

செவ்வாய் - சுக்கிரன் - குரு மூவரும் திருமணத்திற்கு மிகவும் முக்கியமானவர்கள். செவ்வாய் பெண்ணுக்குப் பதிகாரகன் - சுக்கிரன் ஆணுக்கு பத்தினிகாரகன், குரு புத்திரகாரகன், செவ்வாய் கணவனேயும், சுக்கிரன் மனேவியையும் குறிக்கும். செவ்வாய், சுக்கிரன்,- குரு இவர்கள் 6, 8, 12ல் மறைவுற்ருல் பெண்ணுக்குக் கணவனேயோ? ஆணுக்கு மனேவியையோ கொடுக்கமாட்டாது. அவைகள் பலம் குறைந்திருக்கும்போது - அவைகளுக்குரிய சாந்தி, ஐயம் முதலிய கிருத்தியங்களேச் செய்துகொள்வேண்டும். சாந்தி செய்வதன் மூலம் அக்கிரகங்களின் அருளேப் பெற முடியும்.

செவ்வாய் இலக்கினத்துக்கோ? அல்லது சந்திரனுக்கோ? பெண் சாதகத்தில் - ஆண் சாதகத்தில் இருந்தால் செவ்வாய் குற்றமுள்ளது என எடுத்தவுடனே சொல்லிவிடுவார்கள், குற்றம்தான்? அதற்கு ஏதும் விலக்குகள் இல்லேயா? செவ்வாய் நின்ருலும் அந்த இடம் தமது ஆட்சி உச்சவீடுகளாயிருந்து குருபகவானுல் பார்க்கப்பட்டால், செவ்வாய் தோஷம் நீங்கும். சர இராசிகளான மேடம், கார்க்கடகம், துலாம், மகரம் - இவற்றில் செவ்வாய் நின்ருலும் தேபஷம் நீங்கும். எனப் பல சோதிட மேதைகள் கூறுகின்றனர். செவ்வாய் தோஷம்தான் திருமணத்தைத் தடை செய்ததென்றும் கூற முடியாதல்லவா?

# ஏன்?

பெண்ணுக்கு பதிகாரகன் செவ்வாய். ஆணுக்கு பத்தினிகாரகன் சுக்கிரன். புத்திரகாரகன் குருபகவான், இலக்கிஞதிபன், களத்திரத் தஞதிபன் ஆகிய இவர்கள் 6, 8, 12ம் இடங்களில் மறைவுற்றுத் தீயகிரகங்களின் நோக்கமோ? சேர்க்கையோ? பெற்றிருந்தால், எப்ப விவாகம் நடக்கும். குருபகவான் 7ல் நிற்கிருர் நிட்சயமாய் அடுத்த குருமாற்றத்துக்கிடையில் நடக்கும் என எண்ணியெண்ணி ஏமாற்றமடைந்த பலர் உண்டு. குருபகவான் எப்படித் திருமணத்தைக் கொடுப்பார். இலக்கிஞதிபதியும், ஏழாதிபதியும், செவ்வாயும், சுக்கிரனும்தான் திருமணம் நடைபெற ஒத்துழைக்க வேண்டியவர்கள். அவர்கள் உதவி புரியாமல், மறைவுற்றபடியால்த்தான் குருபகவான் களத்திரத்தானத்தில் நின்றும் திருமணத்தைக் கொடுக்கவில்லே.

பெண்கள் சாதகத்தில் 2ம் இடமான குடும்பத்தானத்தையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். குடும்பத்தாஞதிபதிபன் பகை, நீசம், அஸ்தமன தோஷத்தோடு 6, 8, 18ம் இடங்களில் இருந்தாலும், திருமணக்காலம் பின்தள்ளிக்கொண்டு போகலாம்.

திருமணத்திற்கு செவ்வாய், சுக்கிரன், குரு இலக்கிஞதிபன். களத்திரத்தாஞதிபம் இவர்கள் பற்றி ஆராயமல் - சாதகம் செவ்வாய் குற்றம் உள்ளது. திருமணத்தைத் தடுத்துவிட்டது என்பது தவறு. சாந்தி செய்வதன் மூலம் குற்றத்தை நிவர்த்தியாக்கிக் கொள்ள வேண்டும்.

பாவக்கிரகங்களான சனி, இராகு, கேது போன்ற கிரகங்கள் இலக்கினம், குடும்பத்தானம், களத்திரத்தானம் இவைகளில் நின்ருலும் திருமணவாழ்க்கை காலங்கடந்ததாகிவிடும். ஐந்தாம் இடமானத்தையும் கவனிக்க வேண்டும். புத்திரரை பெறும் பலன் இல்லாதவர்சளுக்கும் புத்திர தோஷத்தால் விவாகம் பிற்பட்ட வயதில்த்தான் நடைபெறுமெனவும் சோதிடல் நூல்கள் கூறுகின்றன. புத்திரத்தாஞதிபன், புத்திர காரகன், குருபகவான் கெட்டிருந்தால் திருமணக்காலம் நிண்டதாகலாம். புத்திரரை பெறும் அதிர்ஸ்டம் இல்லாவிட்டால், திருமணப்பலனே கிடையாதென்பதும் சோதிடநூல்கள் சம்மதம். இவ்வாறு கிரக அமைப்புள்ள ஆண்கள் பெண்கள் ஆகிய இருபாலாரும் பார்த்து அதற்குரிய சாந்தி பரிகாரம் செய்யாவிட்டால் திருமணம் வைகாசியில் நடக்கும், ஆவணியில் நடக்கும் என்று எதிர்பார்த்திருப்பதில் பயனில்லே. இலவுகாத்த கிளியின் கதையாகத்தான் முடியும்.

**பழ - பொன்னேயா.**
குறுமண்வெளி.


---

செல்வி கமலா ஐயாத்துரை அவர்களிடம் முறையாகப் பரதநாட்டியம் பயின்று - இன்று பல இடங்களில் நாட்டிய விருந்தளித்து பேரும் புகழும் பெற்றுக்கொண்டு வருகிருர். பாடசாலேசளுக்கிடையே அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற பரதநாட்டியப் போட்டியில் முதலாம் பரிசைப் பெற்றுக்கொண்ட இவர் 1976ல் மட்டக்களப்பில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டு கலே நிகழ்ச்சியில் நாட்டிய விருந்தளித்து அனேவரினதும் பாராட்டுதலேயும் பெற்றுக்கொண்டார்.

இவர் மட்டக்களப்பு உள்ளூராட்சி திணேக்களத்தில் கடமையாற்றும் திரு. S. இராஜரெட்ணம் அவர்களின் ஒரே மகளாவர். இவரது கலேத்தொண்டு மேன்மேலும் தளேத்தோங்க தாரகை மனதார வாழ்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு கவிஞர்

இலங்க வானொலி மெல்லிசைப். பாடல்களில் - குறிப்பாக 'பக்தாஞ்சலி' என்ற பக்திப்பாடல் பகுதியில் அடிக்கடி காதில் விழும் பெயர் 'எருவில் மூர்த்தி'. ஆம் ஒரு காலத்தில் எழுச்சிக் கவிதைகளை எழுதிய எருவில் மூர்த்தி தற்போது தத்துவப் பாடல்களையும் பக்திப் பாடல்களையும் அதிகம் எழுதுகிறார் என்றால் அதற்கு அவருடைய மனப்பக்குவம் தான் காரணமாக இருக்கமுடியும். அன்று முதல் இன்றுவரை எழுதிக்கொண்டிருக்கிறவர் - புறக்கண்கள் ஒளி இளந்தாலும் அகக்கண்களால் உலகத்தை முன்னைவிடத் தெளிவாகப் பார்க்கிறவர் - இலக்கியக் கூட்டங்கள் என்றால் எப்படியும் வந்து சேர்ந்துவிடுவார் - இப்போதும் கவியரங்குகளில் பங்கு பற்றி, கைத்தட்டல் பெறுகின்றவர் எருவில் மூர்த்தி ஒருவராகத்தான் இருக்கமுடியும். வானொலியில் இவர் பேட்டியைக் கேட்டவர்கள் இவரது சிந்தனைத் தெளிவையும், கருத்தாளத்தையும், கவினுறு சொல்லாட்சியையும் கம்பீரமான குரலையும் கண்டு வியந்தவர்கள் இவருடைய கவிதைத் தொகுதி ஒன்றைக் காணத் தவம் கிடக்கிறார்கள். ஆனால் என்ன செய்வது ஈழத்துக் கவிஞன் ஆயிற்றே. நூல் வெளியிட முடியுமா? ஈழத்து இலக்கிய உலகம் கண் திறந்தால் ஒருவேளை இவருடைய கவிதைத் தொகுதிகள் வெளிவரலாம். சாகித்திய மண்டலப் பரிசுகளைப் பெறலாம். பிற மொழிகளில் பெயர்க்கப் படலாம். பிற நாட்டவர்களும் இவரைத் தெரிந்துகொள்ளலாம். அந்த நாள் எப்போது வரும்?

# எழுதாத

இரா. சரஸ்வதி என்ற பெயர் சில காலத்துக்கு முன் ஈழத்து இலக்கிய ஏடுகளில் அடிக்கடி தென்பட்டது. இப்போது அப்பெயரைக் காணமுடிவதில்லை. காரணம் ஏதோ தெரியவில்லை. ஏற்கனவே ஈழத்தில் பெண் எழுத்தாளர்கள் மிகவும் குறைவு. அபூர்வமாகத் தோன்றும் ஒன்றிரண்டு எழுத்தாளிகளும் சொல்லாமல் கொள்ளாமல் ஒதுங்கிவிடுவது நமது 'துரதிஷ்டமே. ஸ்பிறிஸ்வலியைச் சேர்ந்த இரா. சரஸ்வதி அழகிய இனிய தமிழ் நடையில், கதை கட்டுரைகளை எழுதியவர். ஆசிரியையாகக் கடமையாற்றியபோதும் அதிக நேரத்தையும், பணத்தையும் இலக்கியத்துக்குக்கூடச் செலவிட்டவர். மீண்டும் அவர் பேனா எழுதவேண்டும்.



## ரவை உப்புமா

தேவையான பொருட்கள்:


சின்ன ரவை — முக்கால் இரு.
கடுகு — அரைத் தேக்கரண்டி
உளுந்தம் பருப்பு — அரைத் தேக்கரண்டி
வற்றல் மிளகாய் — தேவையான அளவு
பச்சை மிளகாய் — தேவையான அளவு
இஞ்சி — 1 துண்டு
முந்திரிப் பருப்பு — 5 — 6
உப்பு — தேவையான அளவு

ரவையை நன்றாகக் காயவைத்து வறுத்து ஒரு தட்டில் எடுக்கவேண்டும். பின்பு தேவையான சோஸ்பண் பாத்திரத்தை அடுப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கதைஞர்



'நவம்' என்ற பெயரைக் கண்டதுமே ஒருகாலத்தில் நாக்கைச் சப்பிக்கொண்டு கதை படிக்க உட்காரும் வாசகர்கள் இப்போது 'எங்கே தேடுவோம்'? என்று பாடிக்கொண்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அமரர் 'கல்கி'யின் பணியில் தன் எழுத்துக்களை அமைத்துக்கொண்டு, கதை கட்டுரை எதுவானுலும் மிகுந்த 'சுவாராஸ்யத்'துடன் எழுதிய அவர் பேனு இப்போதெல்லாம் எழுதுவதில்லை. ஆனுலும் என்ன பெருங்காயம் வைத்த பாத்திரம் வாசனை வீசத் தவறுவதில்லையே. 'கல்கி' ஒருமுறை நடாத்திய ஈழத்துச் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற 'நந்தாவதி' இன்றைய தினத்திலும் புதிதாக இருப்பது இவரது எழுத்துக்கு உரைதல் 'நீலவேணி' 'அழகு சுடும்' முதலிய தொடர் கதைகளையும், இந்தியப் பயணம்பற்றிய தொடர் கட்டுரையையும் 'சுதந்திரன்' வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள். ஆனுல் 'பைரவன்' என்ற புனைப்பெயரில் வயிறுகுலுங்கச் சிரிக்கவைக்கும் நகைச்சுவைக் கட்டுரைகளை எழுதியவரும் இவர்தான் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? ஈழத்துச் சஞ்சிகைகளில் மட்டுமல்லாது தமிழக சஞ்சிகைகளான 'கல்கி', 'கங்கை', 'சத்தியகங்கை' முதலிய சஞ்சிகைகளிலும் இவரது எழுத்துக்கள் தலைதூக்கி நின்றதை யாரும் ம்றுக்கமுடியாது. ஏராளமான சிறுகதைகள், ஃட்டுரைகள் முதலியவற்றை எழுதிக்குவித்த இவர் இப்போது தானுண்டு தன் ஆசிரியத் தொழில் உண்டு என்று இருக்கின்ருர் என்ருல் காரணம் எதுவாக இருக்கும்; ஒருவேளை ஈழத்தில் நிலவும் பிரசுரகளப் பஞ்சம் காரணமாக இருக்கலாமோ?

# எழுத்தாளர்கள்



கவிதை நடையில் இலக்கியம் படைத்த கவிதா ஈழத்து இலக்கிய நெஞ்சங்களை இலக்கிய மழையில் குளிப்பாட்டிய எழில் பேனு இப்போது எழுதுவதைக் காணேம். இலங்கை ஏடுகள் எல்லாவற்றிலும் 'மகிழம்பூ'வாகச் சொரிந்த அவரது படைப்புகளை மறக்கவே முடிவதில்லை. தொகுப்புகளாகக்கூட எதுவும் வரவில்லை. காற்றிலே தூவிவிட்ட கனகாம்பரமாய் அவர் எழுத்துக்கள் யாவும் கரைந்துவிட்டன. புதிய தலைமுறையினர் தோன்றுகின்றனர் என்ருலும் புதுமையைப் புகுத்திய பழைய தலைமுறையினர் ஒதுங்கிக்கொள்ளவேண்டுமா?

- மணி

---

வைத்து அதில் அரைக்கரண்டி எண்ணெய் விட்டு அதிலே கடுகு, உளுத்தம் பருப்பு, மிளகாய் என்பவற்றைப்போட்டு வறுக்கவேண்டும். சற்று நேரத்தால் இஞ்சி, பச்சை மிளகாய் என்பவற்றைப்பொடிசெய்து அதனுள் போட்டு வறுக்கவேண்டும். பின்பு ஒன்றரைக் குவளை தண்ணீரை அதனுள் விட்டு தேவையான உப்பு கருவேப்பிலை என்பவற்றையும் அதனுள் போடவேண்டும். தண்ணீர் நன்ருகக் கொதிக்கும் போதே ரவையை மெல்ல மெல்லக் கொட்டிக் கொண்டே கிளறவேண்டும். அப்போது அடிப் பிடிப்பதைத் தடுப்பதற்காக இரண்டு தேக்கரண்டி நெய்யைவிட்டு பக்கங்களில் ஒட்ட விடாமல் கிளறவேண்டும். நன்ருக வெந்தவுடன் இறக்கி வைக்கவேண்டும்.

செல்வி மங்களேஸ்வரி நடராசா கல்முனை-3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரளும் அத்தியாயம்



கல்லூரி எல்லை மதிலில் கரைந்த வண்ணமிருந்த காகங்கள். காரியாலயத்திலிருந்து கேட்ட மணியோசையினுல் வெகுண்டெழுந்து வகுப்பறைகளை வட்டமிடத் தொடங்கின.

எப்போது மணியடிக்கும் என ஏங்கியவண்ணமிருந்த மாணவர்கள், மணியோசை கேட்டதுதான் தாமதம், தம் வகுப்பறையில் இருக்கும் ஆசிரியரையும் மனதிற்கொள்ளாது வகுப்பறைகளைவிட்டு வெளியேறித் தத்தமது பாதைவழியே செல்கின்றனர் ஆசிரியர்களும் அதனைக் கவனிக்காதவர்கள்போல மாணவர்களையும் முந்திக்கொண்டு வெளியேறுகின்றனர்.

போசன மணியடித்ததையும் மனதிற் கொள்ளாது 'அந்த' அத்தியாயத்தையே முடிப்பதில் கண்ணுயிருந்த திவாகரன் மாஸ்டர் வெளியில் மாணவர்கள் போடும் கூச்சலால் தனது வேலையைத் தொடரமுடியாதுபோகவே ''விவில் கொன்ரினியூ ஆவ்ர னூன் கிளாஸ்'' என்று மாணவர்களுக்குக் கூறிவிட்டு உணவருந்துவதற்காக கல்லூரி ஊழியர் அறையை நோக்கிச் செல்கின்ருர்.

அதிபரின் அறையைத் தாண்டி ஆய்வுசாலைக்கருகில் சென்றுகொண்டிருந்தவர், தன்னை யாரோ அழைக்கும் சப்தத்தைக் கேட்டுச் சற்றே திரும்பிப் பார்க்கின்ருர்.

சக ஆசிரியை கோகிலா தான் மிகவும் கலவரத்துடன் காணப்பட்டார்.

''வட் கோகிலா? வட் கபின்ட் ரு யூ?''

''பிளீஸ் ஸ்ராவ் ரூமுக்கு வாங்க அங்கு பேசலாம்.''

ஊழியர் அறையில் சாப்பாட்டு மேசையில் எவருமே இருக்கவில்லை. எல்லா ஆசிரியர்களும் 'கரம்' அடிப்பதிலேயே கண்ணுயிருந்தனர். இதனுல் அந்த மேசையில் அவர்கள் இருவரும் சுதந்திரமாகவே உரையாடக்கூடியதாய் இருந்தது. திவாகரன் சாப்பாட்டுப் பெட்டலத்தை அவிழ்த்துச் சாப்பிடத் தொடங்கினுர். கோகிலா சாப்பாட்டுப் பொட்டலத்தைப் பிரித்தபடியே திவாகரன் காதருகில் 'எதையோ' சொல்கிருள். திவாகரன் முதலில் திடுக்குற்றுப்போனுர்.

''யேஸ் திவாகர்! கேள்விப்பட்டவுடனே நானும் உப்படித்தான் அசந்தே போயிட்டன்''

''கோகிலா... மாது இப்படிச் செய்வானெண்டு நான் கனவிலும் ''நினைக்கவேயில்லை!''

''நான் மட்டுமென்ன நினைச்சா இருந்தன்? மாது நல்லவன்தான்...... ஆனுல...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோகிலா...... இப்ப கவலைப்பட்டு என்ன பிரயோசனம்? ம்... ஐ ஆம் ஏ பூல்! நான்மட்டும் அந்தநேரம் கண்டப்பாக இருந்திருந்தால் நீர் இப்ப இப்படிக் கலங்க வேண்டிய அவசியமே இருக்காது!"

மேலும் எதையோ சொல்ல திவாதரன் வாயெடுத்தபோது தொடர்ந்தும் இரு ஆசிரியர்கள் போசனப் பொட்டலங்களுடன் மேசையினை வந்தடைந்தனர். மேலும் அங்கிருந்து உரையாடுவது சாத்தியமற்றது என்பதை உணர்ந்த திவாகரன் சாப்பிட்டதும் சாப்பிடாததுமாக எழுந்து சென்றுவிட்டான்.

"கரம்" எழுப்பும் கலகலப்பு இபபோ உச்சக்கட்டத்தை அடைந்து விட்டது!

திவாகரன் மாஸ்டரின் மனமோ ஓர்நிலையில் இல்லாது தவித்துக் கொண்டிருந்தது. ஊழியர் அறையின் ஓர் மூலையில் இருந்தவாறே பாடப்புத்தகம் ஒன்றினைப் புரட்டிக் கொண்டுருந்தார் அவர். பாடப்புத்தகத்தின் முதல் அத்தியாயம் ... ... ... புரண்டு கொண்டிருந்தது!

திவாகரன் அந்தக் கல்லுரிக்கு ஆசிரியராக வந்து ஏறத்தாழ ஏழு வருஷங்களாகி விட்டன. அட்வான்ஸ்லெவல் வரை படித்த அவர் ஒரு மாணவ ஆசிரியராகத்தான் அந்தக் கல்லூரிக்கு நியமனம் பெற்றிருந்தார். மாதவன் திவாரனுடன் ஆரம்ப பள்ளி தொட்டு அட்வான்ஸ்லெவல் வரை ஒன்ருகப் படித்தவர். ஆனுல் திவாகரனைவிட வசதி படைத்தவர். அதனுல் சர்வ கலாசாலை வரை மாதவனின் படிப்பு நீண்டது. அண்மையில் தான் ஓர் பட்டதாரி ஆசிரியராக மாதவன் அந்தக் கல்லூரிக்கு நியமனம் பெற்று இருந்தார்.

அப்போதுதான் அந்தக் கல்லூரிக்கு மாற்றலாகி வந்து இருந்தாள். பட்டதாரி ஆசிரியை கோகிலா. கண்டதும் கண்ணைப் பறிக்கின்ற அழகு! கஷ்ரமான ஓர் குடும்பத்திலே.. ஏழு பெண்களுள் மூத்தவளாக பிறந்தாலும் தனது ஏழ்மை நிலையை வெளியே காட்டாமல் இருந்து வந்தவள் வயது இருபத்தெட்டினைத் தாண்டிஞலும் பதினெட்டு வயதுப் பெண் ஒருத்தியின் இளமையும் அழகும் வஞ்சகமின்றி கோகிலாவை ஆட்கொண்டிருந்தன.

மாதவனும் கோகிலாவும் பட்டதாரி ஆசிரியர்கள் ஆதலால் கருத்தரங்கு வகுப்பில் அடிக்கடி இருவரும் சந்திக்க வேண்டிய வாய்ப்பு ஏற்பட்டது! அந்த சந்திப்பு மாதவனுக்கு தடுமாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. ஆமாம்...... கோகிலாவை மாதவன் மனதார விரும்பினுன். இதனை வெளிப்படையாக கோகிலாவிடம் எடுத்துச் செல்ல மாதவனின் மனதிற்குச் சற்றுச் சங்கடமாகவே இருந்தது. அதற்கு நண்பன்...... திவாரனின் உதவி தேவைப்பட்டது!

அன்று ஆய்வு சாலையில் வைத்து மாதவன் திவாரனிடம் விஷயத்தை தெரிவித்த போது......, "மாது! என்னைப் பொருத்தமட்டிலை கோகிலா என்ரை ஒண் சிஸ்டர் மாதிரி... அவளை நல்லவன் ஒருவன் கைப்பிடிப்பதை நான் விரும்பாமல் இல்லை...... ஆனுல்"

"நீ எதை மனசிலை வைச்சுக் கொண்டு இப்படிச் சொல்லுருய் எண்டு எனக்கு புரியுது திவாகர்"

"மாது கோவப்படாதை! உள்ளதைத்தான் கேக்கிறன்! படிக்கேக்குள்ளை அவள் மைதிலியை விரும்பிப் பிறகு என்ன செய்தனீர்?"

"திவாரர்! அது வேறை... இது வேறை"

"வட் ஆயு ரோக்கிங் மாது?"

"அது பள்ளிக் காதல்... பருவ வெறியிலை ஏற்பட்ட பட்ட காதல் எண்டு கூடச் சொல்லலாம்"

"என்ன மாதவன் சொல்கிருய்? நீ சொல்லுறபடி பருவ வெறிக் காதலாக மைதிலி அதைக் கருதவில்லையே..."

"திவாகர்......!"

"அதுதான் சொல்லுகிறன் மாதவன்! மைதிலியின்ரை நிலை இப்ப என்ன? 'நீ கம்பசுக்கு போகேக்குள்ளை அவளை மறந்தாய்! அவள் அதைத் தாங்கிக்கொள்ளாமல்...... இந்த உலகத்தையே மறந்தாள்! பாவம்... .. பைத்தியக் காரியாகி விட்டாள்!"

"வட் யூ சே? மைதிலிக்கு வைத்தியம் பிடிச்சது எனனு லையா? கம்பசுக்கு என்ருண்ஸ் கிடைக்காததாலை யெண்டு ஊரிலே......"

"ஊரிலே ஆயிரம் கதைச் சாலும் உள்ளது இதுதானப்பா!"

"திவாகர்...... முடிவா நீ என்ன சொல்லுகிருய்?"

"கோகிலாவின்ரை விதி மைதிலியின்ரை கதியாகிடக் கூடாதே என்பதுதான் எனக்குள்ள கவலை!"

"மைதிலியாக இந்த மாது மாறுகிறது மட்டும் உனக்கு இஷ்ரவா திவாகர்?"

"மாது ... ... வட் யூ மீன்?"

"யேஸ்! திவாகர்...... எனக்கு கோகிலாவின்ரை நினை வாலேயே பைத்தியம் பிடிச்சிடும் போலிருக்கு!"

**புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மாது! அப்பனைக்கொரு புறமிஸ் கொடு!''

''என்ன?''

''இனி கோகிலாவைத் தவிர வேறொருத்தியையும் ஏறிட்டே பார்க்கமாட்டன்! அவளையே மறி பண்ணுவன் எண்டு''

அருகிலிருந்த உடைந்து போன ரெஸ்ரியூப்பை ஆவேசத்துடன் எடுதத மாதவன் தன்கையில் பலமாகக் கீறி பீறிடும் இரத்தத்தைத் தொட்டு திவககரனிடம் சத்தமாகச் சொல்கிருன். ''இந்த பிளட் மீது புறமிஸ் பண்ணி சொல்றன். கோகிலாவை கடைசிமட்டிலே நான் கைவிட மாட்டன்''

இப்படியெல்லாம்...... நடந்து கொண்ட மாது இன்று எப்படி மாறிப்போனது..... ?

''ருஸ்கல்! உனக்கு இப்படி செய்ய எப்படியடா மனம் வந்தது?'' — சத்தமாக தன் மானவனை அதட்டும் சக ஆசிரியர் குரல் கேட்டு நினைவு திரும்புகிருர் திவாகரன். மேலும் அந்தச் சச்சரவில் மனதை லயிக்காது......கையில் புரளும் புத்தகத்தின் அடுத்தடுதத அத்தியாயங்களைப் புரட்டுகிருர் அவர்.

முதன் முதலாக ஒரு சரஸ்வதி பூஜை அன்றுதான் காதலுக்குத் தூதாக கோகிலாவிடம் திவாகரன் சென்ருர்,

மாதவனின் நிலையதனை கோகிலாவுக்கு எடுத்துரைக்க திவாகரன் பட்டபாடு இருக்கிறதே ..... அப்பப்பா...... அவருக்கு போதும் போதும் என்ருகி விட்டது!

''இதை நான் அப்பவே நினேச்சன்!''

''என்ன...... நீர் சொல்லுகிறீர் கோகிலா?''

''செமினர் நடக்கேக் குள்ளை அந்தாள் திரும்பி திரும்பிப் பார்த்து எனக்குப் பல்லைக் காட்டைக்குள்ளை!''

''கோகிலா...... மாது மிகவும் சாதுவானவன்''

''உங்களை விடவா?''

''அ...... அ...... ஏதோ! நீர் என்ன முடிவு சொல்லுறீர்?''

''கண்டவங்களையும் எனக்குக் கட்டிவைக்க என்ரை அப்பா அம்மா அவை எவரும் ஏமாளிகள் இல்லை.......!''

''கோகிலா......! ஒரு சகோதரன் நான் இருக்கிறதை மறந்து நீர் பேசிக்கொண்டே போறீர்...... ஒரு சகோதரிக்குக் கல்யாணம் செய்து வைக்கிற திலை நான் அக்கறையில்லாமல் இருப்பனு என்ன?...... ஏதோ இத்தனை நாளும் ஒரு ஒண் சிஸ்ரரோடை பழகின உரிமையோடை...... இவ்வளவு பாசத்தோடை கேட்ட எனக்கு நல்ல பதில் தருவீர் எண்ட நம்பிக் கையிலை வந்தன் ஆனல்......?''

''தி...... திவாகர்''

''ஆனல் கோகிலா ஒண்டு மட்டும் சொல்லுறன்...... இதுவரையிலை நான் எந்த விசயத்திலையும் தோல்வி கண்டதேயில்லை! ஆனல் இதிலை மட்டுந்தான்......

''திவாகர்!...... நீங்க என்னை சகோதரியாக...... உடன்பிறந்தவளாக எண்ண... நான் மட்டும் கண்மூடித்தனமா......ப்! நீங்க எனக்கு உடன் பிறப்புதான்...... எனக்கு அண்ணன் தான்...!''

''கோகிலா வட்யூ மீன் பை திஸ்?''

''ம்... உங்க மாதுவை... உங்களுக்காக நான்............''

''மாஸ்டர் லெட்டர் போயூ!'' — கல்லூரி பியூனின் குரல் அது!

கடிதத்தினைப் பிரித்தார் அவர். அது கோகிலா சொன்ன அந்த சேதியையே ஊர்ஜிதப் படுத்தியது.

கடிதத்தில் குறிப்பிடப்பட்ட அந்தப் பகுதியில் திவாகரனின் கண்கள் மீண்டும் நிலைக்குத்துகின்றன!

''......நினைத்தபடி நான் கோகிலாவை ஏற்றுவிட்டால் என் தங்கையை யார் பார்ப்பது? அவளுக்கும் ஒரு வளமான வாழ்வு அமைவதையே நான் விரும்புகிறேன்! நான் மட்டும் கோகிலாவுடன் நலமாக இருந்தால் போதுமா? அதுதான் இந்த முடிவுக்கு வந்தேன்!

சீதனமென்று தருவதற்கோ கோகிலாவிடம் எதுவுமே இல்லை! ஆனல் இப்போ எனக்கு வாற புறப்போசலிலை இனமாக மட்டும் இரண்டு இலட்சம் திவாகர்! இரண்டு இலட்சம். தவிர லாண்ட்...... ஹவுஸ்...... ஜுவலறி என்று என் பெயருக்கு ரூ லாக்ஸ் பெறுமதியான டவுறி!

எனக்காக எதையும் நான் ஏற்க விரும்பாவிட்டாலும் என் தங்கைக்காக... அற்லீஸ் ஒரு ரெண்தவுசன்ட் கோகிலாவால் தர முடியுமா? ஒரு மூத்த சகோதரியை இன்னும் வீட்டிலேயே வைத்திருக்கும் உனக்கு இது நன்ருய் புரியும் எனவே நினைக்கிறேன்! இதை விட அதிகம் நான் எழுத தேவையில்லை என............''

அமைதியில் மூழ்கியிருந்த கல்லூரி மீண்டும் 'கலகலப்பில்' களை கட்டிவிட்டது! சைலன்ஸ் பீறியேட் முடிந்து மாணவ தலைவர்கள் தத்தமது வகுப்பறைக்கு சென்று கொண்டிருந்தனர்.

''ஆ யூ பிறீ மிஸ்டர் திவாகர்?'' — சக ஆசிரியர் ஒருவர் வினவினர்.

''ஒ யேஸ் இப்ப நான் பிறீ''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் தனிமை! அதே பாடப்புத்தகம் புரள்கிறது... கடைசியாக அவர் வகுப்பில் படிப்பித்த அந்தப்பாடம் இப்போ கையில்!

''இந்தக் கடிதத்தை கோகிலா ரீச்சர் தந்தா. தான் அரைநேரத்தோடை லீவிலை போறாவாம்''—ஆரம்ப வகுப்பு பையன் குரல் கேட்டு நிமிர்கிறார் மாஸ்டர்.

இப்போ கடிதம் கையில் புரள்கிறது!

''அன்புடன் திவாகர்!

அபலை கோகிலா எழுதிக் கொள்வது!

திவாகர்! மாது என்னை ஏமாற்றிவிட்டார்! என் அழகை...... இளமையைக் காதலிக்க துணிந்த அவரது மனம் என்னை ஏற்கத் துணியவில்லை! என்னை காதலிக்க ஆரம்பித்தபோது கண்ணை மூடிய தங்கைப்பாசம் இப்போ அவருக்குப் பிறந்துள்ளது!

''சீதனமாக எனக்குத் தர உன்னிடம் என்ன உள்ளது கோகிலா? எனக்காக எதையும் நான் கேட்கவில்லை என்னை நம்பியுள்ள தங்கைக்காகவே கேட்கிறேன்! தங்கையைத் தவிக்கவிட்டு உன்னை நான் ஏற்பதனால் நான் படித்த படிப்பே பயனில்லாது போய் விடும்!

காலையில் நான் அறிந்த விடயங்களுக்கு மேலாக இப்போ இப்படி மாது எனக்கொரு லெட்டர் போட்டிருக்கிறார்... அதைப் படித்து விட்டே இதை நான் எழுதுகிறேன்!

இரண்டு இலட்சம் சீதனம் காணி பூமி மாடிவீடு நகை நட்டு இத்தியாதிகளுடன் மாதுவுக்கு இன்று கல்யாணமாம்!

எண்ணியபடி காதலிப்பது... கண்களை மூடிக்கொண்டு வாக்களிப்பது... பின்பு கல்யாணம் எண்டதும் அக்கா தங்கை எண்டு முதலைக் கண்ணீர் வடிப்பது! சீ... இவர்களும் மனிதர்களா? படித்து விட்டார்களாம் பெரிய படிப்பு! இவர்களது படிப்புக்கு இப்படிச் செய்வது மட்டும் அழகோ? ஆணாக பிறந்து விட்டார்கள் அவ்வளவுதான்! கல்யாணத்தைப் பொருட்காட்சியாக எண்ணுகின்ற மாதுவைப் போன்றவர்கட்கு கழுத்தை நீட்டுவதைவிட.........!

திவாகர் எனக்கு நேர்ந்த விதி வேறெந்த பெண்ணுக்குமே நேரக்கூடாத கதி! ஆமாம் திவாகர்! உங்கள் மென் இதயத்தை கல்லாக்கி நான் எழுதுவதை தொடர்ந்து வாசியுங்கள்!

இந்த மாதுவை நான் மனப்பூர்வமாகக் காதலித்ததாகவா நீங்கள் கருதுகிறீர்கள்? இல்லை திவாகர் இல்லை? மாதுவை உங்கள் வற்புறுத்தலிற்காகவே மனம் செய்து கொள்வதாகச் சம்மதித்தேன்...... அதற்குமுன் நான் ஒருவரை மனதாரக் காதலித்தேன்! நான் காதலித்த அவரை மணம் செய்துகொள்ளவே மனதார விரும்பினேன்! அனால் விதி......?

ஆமாம் திவாகர்... நான் யாரைக் காதலித்து கணவனாக கனவு கண்டேனோ, அவர் என்னை தன் 'ஓண் சிஸ்சராக' மதிக்கிறார்... என் காதல் ஒருதலைக் காதல் என்பதை அப்போ தான் உணர்ந்தேன்!

நான் விரும்பிய அவர்...! மாதுவைப் போல மாறக்கூடியவர் அல்ல...! அவர் மனிதர்! அவர் வேறுயாருமல்ல... நீங்கள்தான் திவாகர்! நீங்கள் தான்! அதைக் காலம் வரும் போது உங்களிடம் சொல்லலாம் எனக் காத்திருந்தேன்... வீட்டில் ஒரு மூத்த சகோதரியை கரைசேர்க்காது வைத்திருக்கும் உங்களிடம் அதை எப்படி எடுத்துச் சொல்வதென்றுதான்......

என்றாலும் சரஸ்வதி பூஜை அன்றாவது உங்களிடம் அதைச் சொல்லிவைக்கலாம் என்றிருந்தேன்... நான் அதைச் சொல்லவர நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறெதையோ சொல்லிவிட்டீர்கள்!

நான் நினைத்தபடிதான் வாழமுடியவில்லை! நீங்கள் நினைத்தபடியாவது வாழ்வோமே என்ற காரணத்திற்காகவே... என்னையடுத்தடுத்து அடுக்காய் உள்ள ஆறு பெண்களினதும் வாழ்வும் தடைப்பட்டு விடக்கூடாதே... அதற்காக ஒரு ஒண் பிறதர் எனக்கு தேடித்தரும் கணவனுக... மாதவனை நான் ஏற்றேன்!

ஆனால் மாதவன் என் இயலாமையை சாதகமாக்கி...... ஆமாம் திவாகர் மாது ஆசை காட்டி என்னை மோசம் செய்து விட்டார்! இதற்காக நான் குளம் குட்டையை நாடும் கோழையாகி விடமாட்டேன்.

காலம் பூராகவே கன்னியாக நான் வாழ்ந்திடலாம்... ஆனால் இந்த பொல்லாத சமூகம் அதற்கு .. அதுவுமல்லாமல் தொடர்ந்துள்ள என் தங்கையர் வாழ்வு?

சொத்து சுகம், சீதன வாகனம் இல்லாததால் மாது என்னை மறந்திடலாம்! ஆனால் என் உடன் பிறப்புக்களை நான் மறக்கலாமா!

இலட்சக் கணக்கிலே என்னிடம் பணம் இல்லை! ஆனால் எனக்கும் ஒரு இதயம் உண்டு திவாகர்! அதிகம் படித்திருக்கலாம் ஆனாலும் நான் ஒரு பெண்!

ம்... இப்போ எதுவுமே அறியாது வாழ்க்கையில் துடிக்கிறேன் திவாகர்! என் முடிவு ? ஏன்... என் வாழ்வு?

அன்புடன் முடிவை நாடும் அபலை கோகிலா!

---

ஒருவர்: நான் உங்களைவிட அழகாயிருக்கிறேனுமே!

மற்றவர்: எந்த எருமமாடு சொன்னவன் அப்படி?

— கரவெட்டி சிவா

---

காரியாலயத்தில் இருந்தெழுந்த மணியோசை திவாகரன் காதுகளில் வந்து மோதுகிறது!... அவரின் பிறீ பீரியேட் இப்போ... முடிந்து விட்டது!

கடிதத்தினை படித்து முடித்தவர், மீண்டும் ஒரு முறை கடித இறுதி வாசகங்களை நோக்குகிறார்!

''அன்புடன் முடிவை நாடும் அபலை கோகிலா!'' கண்களிலிருந்து விழுந்த நீர்த்துளிகள் அபலை என்ற சொல்லினை ஏனோ அழித்து விடுகின்றன!

கடிதத்தினை மடித்துச் சட்டைப் பைக்குள் வைத்தவர் புதிய தீர்மானம் ஒன்றுடன் புத்தகத்தைத் தூக்கியவாறே வகுப்பறைக்குள் நுழைந்து புதிய பாடம் ஒன்றினைப் புரட்டினார்.

(யாவும் கற்பனை)

---

## இயந்திரங்கள்

உழைப்பதற்கென்று
பிறந்துவிட்ட
இயந்திரங்கள்
நாங்கள்......
எங்கள் அங்கங்களில்
ஒன்று பழுதானாலும்
எமது குடும்ப
உலகின் வளர்ச்சியிலே
பாதிப்பு ஏற்பட்டுவிடும்!
எத்தனை துயரிலும்
உழைக்க வேண்டிய
ஓயாத உருளைகள் நாம்...
உயிர் மூச்சுப்
பழுதுவந்தால்......
ஆறடி மண்ணிலே
அடங்கிவிடும்
அலங்காரப் பொம்மைகள்!

பரந்தன் கலைப்புஷ்பா

## சிரிப்பு

முதல் திருடன்: திறந்த பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் போகிறார்களாம்; நமக்கு இனி வேட்டைதான்.

இரண்டாம் திருடன்: மடையா, திறந்த பல்கலைக்கழகம் என்றால் கதவுகள் எல்லாம் திறந்து கிடக்கும் என்று எண்ணிக்கொண்டாயா? இது தபால்மூலம் கல்வி கற்பிக்கும் பல்கலைக்கழகமாம்.

* * *

ஒருவர்: என்னப்பா அவசரமாகப் போலிஸ் ஸ்டேஷனுக்குப் போகிறாய்? ஏதாவது கலாட்டாவா?

மற்றவர்: இல்லையில்லை, என்னுடைய வீட்டை இடித்துக் கட்டவேண்டியிருக்கிறது.

* * *

''சிறுபான்மை இனத்தின் நலன்களைப் பாதுகாப்பதில்தான் ஜனநாயகத்தின் பெருமை தங்கியிருக்கிறது என இந்தப் புத்தகத்தில் போட்டிருக்கிறது''.

''அப்படியானால் அது இலங்கையில் உள்ள பாடசாலைகளுக்கு ஏற்றதில்லை.''

— மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சோதனைமேல் சோதனை

இளவரசர் சாள்ஸ், டயனு ஸ்பென்சர் திருமணம் பற்றிய கிளுகிளுப்புச் செய்திகளைப் படித்து ரசிப்பவர்களுக்கு நெருடலான செய்தி இது. மணப்பெண் என்று நிட்சயிப்பதற்கு இரண்டு தினங்களுக்கு முன் டயனுவுக்கு Virginity Test நடத்தப்பட்டதாம். ஏன்? இதுவும் ஒரு அரசகுடும்ப வழக்கம். மணப் பெண் கன்னித்தன்மை இழந்திருந்தால் பின்னல் பெரிய பிரச்சினைகள் எழலாம் அல்லவா? இந்த சோதனையை ஒரு டாக்டர் மட்டும் நடத்தினல் போதாது. அந்தக் காலம் முதல் பெரிய டாக்டர் குழுவே நடத்தவேண்டும் அதன் படி டயனுவுக்கு பத்தொன்பது டாக்டர்கள் Verginity Test செய்தார்களாம்.

('முத்தாரம்' - 9.8.81)

## எரிபொருள் இல்லாமல் ஒரு யந்திரம்

எரிபொருள் எதுவுமே இல்லாமல் மின்சாரம் தரும் ஜெனரேட்டரை இத்தாலியில் உள்ள ஒரு என்ஜினியர் கண்டு பிடித்திருக்கிருர் அறுபது வயதுடைய என்ஜினியர் பெயர் 'குகோ' இருபது ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து இந்த அரிய இயந்திரத்தை அவர் கண்டுபிடித்திருக்கிருர். ஆனல் இதன் இயக்கம்பற்றி அவர் எதுவும் கூறமறுத்துவிட்டார். அசாத்திய பலம் வாய்ந்த இரண்டு இயற்கை சக்திகள் இதனுள் இருக்கின்றன. அவை ஒன்றுக்கொன்று எதிராக இயங்க முன்சக்தி ஏற்படுகிறதாம்

('முத்தாரம்' - 9.8.81)

## எம்ஜிஆரின் தொப்பி

கர்ணனின் கவச குண்டலங்கள் போன்று எம் ஜி ஆரின் தொப்பியும் கறுப்புக் கண்ணுடியும், அவருடன் கூடவே ஒட்டிக்கொண்டு பிறந்ததோ என்று எண்ணும் அளவுக்கு முக்கியத்துவம் அடைந்திருக்கின்றன. அண்மையில் கோவையில் ரயில் நிலையத்தில், மாணவன் ஒருவன் அவருக்கு மாலே அணிவிக்க முயன்ற போது, முடியாது போகவே எட்ட நின்றபடி மாலையை வீசி எறிந்திருக்கிருன். மாலே எம்ஜி ஆருடைய தொப்பியைத் தட்டிவிட்டது. அப்புறம் அந்த மாணவனுக்கு உரிய 'வெகுமதி' கிடைத்தது என்பதைச் சொல்லவேண்டிய தில்லே.

ஆனல் இந்தச் செய்தியை எந்தப் பத்திரிகையும் பிரசுரிக்கக் கூடாது என்று எம்ஜி ஆர் கட்டளையிட்டாராம். இக்கட்டளையை மீறிய காரணத்தால் தான் கோவையில் உள்ள 'மாலே முரசு', 'தினகரன்' அலுவலகம் குண்டர்களால் தாக்கப்பட்டதாம். 'கல்கி' முதல் முக்கிய பத்திரிகைகள் அனைத்தும் இச்செயலைக் கண்டித்திருப்பது தெரிந்த செய்தி.

('முத்தாரம்' - 2.8.81)

## டௌசிங்

'டௌசிங் என்றுல் என்னவென்று தெரியுமா? பூமிக்கு அடியில் நீரூற்று உள்ள இடத்தைக் கண்டுபிடித்துச் சொல்லுவதுதான் டௌசிங் இதை ஒரு தொழிலாகவே செய்பவர்கள் எல்லா நாடுகளிலும் இருக்கிருர்கள். புளியங் கொம்பு அல்லது வேப்பங்கொம்பிலிருந்து சுமார் ஒரு அடி நீளமுள்ள கிளையை வெட்டி எடுத்துக்கொண்டு வயல்களில் நடந்து போனுல், நிலத்துக்குக் கீழே ஊற்று இருக்கும் இடத்துக்கு நேரே வரும்போது அந்தக் கொம்பு மேலே எழும்பும், இதை வைத்துக் கொண்டு கீழே தோண்டுவார்கள்.

('மாலே மதி' ஆகஸ்ட் 81)

## இப்போதுதான் சொல்கிருர்கள்


அண்மைக்கால செய்தித்தாள்களில் அனைவரையும் திகைப்புக்குள்ளாக்கிய செய்திகள் இரண்டு. ஒன்று ஜனதிபதி தனது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு வன்செயல் பற்றி உபதேசம் செய்தது, கட்சியைச் சேர்ந்த சிலர் இந்த வண்செயல்களுக்குப் பின்னணியில் இருந்ததாகத் தெரியவருகிறது. அதனல் ஆத்திரத்தைவிட ஆழ்ந்த கவலையில் இப்போது பேசுகிறேன் என்ருர் அவர். இரண்டு நிமிடம் நீடித்த இப்பேச்சின் முடிவில் இத்துடன் கூட்டம் கலைந்தது என்று முடித்தார். மற்ருெரு முக்கிய செய்தி பிரதமர் பிரேமதாசா அவர்கள் வியாங்கொடையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் சிங்களவர்கள் தமிழையும், தமிழர்கள் சிங்களத்தையும் கற்பதன் மூலமே நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க முடியும் என அவர் கூறியதாகும்.

('இலங்கை வானெலி' - 6-9-81)

தொகுப்பு - 'மணி'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அர்த்தமற்ற உறவுகள்

இந்த லயத்து வாழ்க்கையிலே ஒரு அர்த்தமும் இல்லைங்கிறது சொக்கனுக்கு இப்பத்தான் புரியுது.

கேவலம்... என்ன கசப்பான வாழ்க்கை. ஒரு தகப்பன் பெற்ற மகள் கிட்ட... நினைக்கவே காரி உமிழத்தான் மனசு வருது. மனிசன மிருகத்திலே இருந்து பிரித்து வைத்தது இந்த ஒரு பகுத்தறிவுதானே ஆனால், அதையும் மீறி ராத்திரி அவன் நடத்திட்ட விதம்.. ஒரு சராசரி மனுதனுல இருந்து அவனை கோடிட்டு பிரிச்சுக்காட்டுவதாயல்லவா அமைந்துவிட்டது.

அந்த ஆறு லயக்காம்பிராவிலே மூன்றாவது காம்பிராவிலே அவன் வாழ்க்கைன்று தொடங்கியபோது ஒரு பிரச்சினையாகவே தெரியல. அவனுக்கும், மாறிக்கும் மூன்று சின்னஞ் சிறுசுகளுக்கும் அது போதுமான வசதியாக் கூட தோன்றியது. ஆனால் பத்து பதினைஞ்சு வருஷத்தை அதுக்குள்ள கழித்த பின்தான், அதுவும் நேற்று இரவு நடந்த சம்பவத்துக்குப் பின்தான் அவனுக்கு வேதனையா கிறது புரியுது.

ஆடு மாடுகள்கூட சீவிக்க முடியாத அந்த பட்டியிலே ஒரு பக்கம் அடுப்பைப்போட்டு ஒதுக்கிட்டு மிச்சத்திலே ஐந்து பிள்ளைகளும் கண்டும் காணுவையும் சம்சாரம் பண்ணி குடும்பத்தை நடத்திவிட்டான். தனக்கும் குடும்பத்திற்கும் அந்த காம்பிரா போதாது என்று தெரிந்தபோதெல்லாம் தோட்டத்து துரையைக் கண்டு கெஞ்சி காலைப்புடிச்சும் ஒரு பலனும் இல்லைங்கிறது, அவர் முகத்தை சுளிச்சு சமாளிச்சபோதே அவன் உணர்ந்து கொண்டான்.

பகல் பொழுதைப் பொறுத்தவரையில் அவனுக்கென்று ஒரு குடும்பம், வீடு, குமருப் பிள்ளைகள் இருக்குமென்பதை தெரிய நியாயமுமில்லை. பிரச்சினையும் இல்லை. எல்லாத்தொல்லையும் மாலையாகி இரவானதும்தான் பேயைப் போல உருவெடுக்கும். அத்தனை பிள்ளைகளையும் படுக்க வைத்தாகவேண்டுமே. வீடு இல்லைன்னு பிள்ளைகளையும் அவன் மிச்சம் பிடிக்கலையே! மூத்த மகனைப் பொறுத்தவரையிலே பிரச்சினையே இல்லை. அவ... ஆண்பிள்ளை பக்கத்து வீட்டிலே... படுக்கிறதுக்கு பாயை சுருட்டிக்கிட்டு போயிடுவான்.

ஆனா பொண்ணுகளை அப்படி வீடு தவறி அனுப்ப முடியுமா... என்ன? அதுவும் குமரிகளை! அதுகள் எங்கே போய்ப்படுக்கும். இந்தப் பிரச்சினை தலை வேதனையா அவன உறுத்தினாலும் எப்படியோ கண்டும் காணாமையும் எதையோ பண்ணிக்கிட்டுத்தான் இருந்தான்.

இந்தக் கசப்பையும், தொல்லையையும் மறக்கவே அவன் வேலை முடிந்த கையோடவே பக்கத்திலே இருக்கிற நாட்டுக்குப்போய் புளிச்ச கள்ளை வயிறு நெறைய புடிச்சுக்கிட்டு வந்து காலத்தைப் போக்கிக்கிட்டு இருந்தான். சொக்கன் நாட்டிலே இருந்து வாரத்துக்குள்ளே குமரும், குட்டிகளும் எப்படியோ பழைய பாயையும், சாக்கையும் சுருட்டிக்கிட்டு கிடக்கும். இவனும் கொஞ்சம் சந்தோஷமா... நேற்றும் அப்படித்தான்.

கள்ளு மயக்கத்திலே.... கிறக்கத்திலே... வந்து காம்பிரு கதவை தள்ளிவிட்டு முத

→

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீணான விடியல்கள்

சில
விடியலின்
வேதனைகள்...
மனப்புண்ணில்
வடியும்
குருதித்துளிகளின்
நாற்றங்கள்
சமுதாயத்தில்
சகிக்க முடியாதவை!
வாழ்வுமலர்களின்
அழுகிய மணங்களை
முகரும்......
நாசிகளை
வெறும்......
உணர்வற்றதாக்கிவிடும்!
பசிபாம்பின்
மௌன ஊர்வலம்
ஏழைகளின்
எலும்புகளை எரித்துவிடும்!
விழிப்பாதை நெடுவழியே
நீண்டிருக்கும்
கண்ணீர்த்துளிகளின்
பெருவெள்ளம்
இந்த - வெறும்
அச்சுத்தாள்களின்
எண்களை
கரைத்துவிடும்.
இந்த விடியல்கள்
என்றும்......
ஏழைகளுக்கு
வெறும்......
வேதனைகள்தான்.

**"அன்புவாணன்"**
74/3, விவேகானந்த மேடு,
கொழும்பு - 13.

---

விலே கிடந்த உருவத்தைத் தள்ளிவிட்டு அவதான மாரிய தேடி போர்வையை விலக்கு கிறுன் அவன். கணிப்பு தவறி விட்டது.

அது அவனது மூத்த மகள். அவ உருவம். சேச்சே இப்படியும் ஒரு... அவன் எச்சிலை மென்று விழுங்கிக் கொண்டே அருவருப்பான எண்ணங்களுடன் வெளியேறு கிறுன்.

மறுநாள் அவன் அவள் முகத்தில் விழிக்கத்தான் முடியுமா? அர்த்தமில்லாத உற வாய் போயுட்டுதே.

**ஏ. பி. வேதாந்தமூர்த்தி**

## ஹிஜ்றியாண்டு

நபிகள் நாயகத்தை மதீனு மக்கள் பின்பற்றுவதையும் மதீனுவில் முஸ்லிம்களின் செல்வாக்கு அதிகரிப்பதையும் கண்ட மக்கா வாசிகள் திகிலடைந்து நபிகள் பெருமானை மதீனுவிற்குப் போகாமல் தடுப்பதற்கு அவரைக் கொலை செய்வதே சிறந்த வழி எனத் திட்டமிட்டனர். இதனை அறிந்த நபிகள் நாயகம் (சல்) தம் படுக்கையில் அபூதாலியின் மகன் அலீ (றலி) என்பவரை உறங்கச் செய்துவிட்டு அபூபக்கர் (றலி) என்பவருடன் இரவிரவாக வெளியே சென்று மக்காவுக்கு அப்பாலுள்ள வெளியில் "தௌர்" எனும் மலைக்குன்றின்மீது ஏறி அங்குள்ள குகை ஒன்றிலே தங்கினுர். மூன்று நாட்களுக்குப்பின் அக்குகையிலிருந்து புறப்பட்டு 622ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 20ம் நாள் 53ம் வயதில் மதீனுவுக்கு அருகிலுள்ள குபா என்னுமிடத்திற் போய்ச்சேர்ந்தார். இதுதான் நபிகள் திலகத்தின் வரலாற்றில் "ஹிஜுறுத்" என்று பெரிதாகப் போற்றப்படுகின்றது. இதிலிருந்தே முஸ்லிம்களின் ஹிஜ்றி யாண்டு கணிக்கப்படுகிறது.

ஆதாரம்: "கலையும் பண்பும்"

---

### ஒரு மலேசியா இளைஞனின் தமிழ் ஆர்வம்

தமிழர் வாழும் நாடுகளிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகள் அனைத்தையும் பெற்று ஒரு நூல் நிலையம் அமைத்து அதன் மூலம் தமிழுக்கு தொண்டு செய்கின்ற பெரும் பொறுப்பில் ஈடுபட்டிருக்கிறுர் மலேசியாவைச் சேர்ந்த திரு. எம். கண்ணன் என்பவர்.

எனவே பழைய புதிய சஞ்சிகைகளை வைத்திருப்பவர்கள் அவரோடு தொடர்பு கொள்ளும்படி வேண்டுகிறேம்.

விலாசம்

K. KANNAN
413, Block - 20
Felda Lui Timur
Bahau
N. Sembilan
Malaysia.

---

ஒருவன் :- நான் இந்த மணிக்கூட்டை 6 மாதங்கள் பாவித்திருக்கிறேன். அதை 300 ரூபாய்க்கு வாங்கினேன். அந்த ஆறு மாதத்திற்கும் 150 ரூபாவைக் கழித்து, இப்போ இந்த மணிக்கூட்டுக்கு 150 ரூபா கொடுக்கிறுயா...?

மற்றவர் :- வேண்டாம் சேர். இன்னும் 6 மாதம் பாவித்து விட்டு எனக்கு இலவசமாக அதைத் தாருங்கள்.

"நற்பிட்டிமுனைபளீல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகம் திரும்புவோரின் மறுவாழ்வு

## ஒரு மலையக மகனின் உணர்ச்சிக் கடிதம்

அன்புள்ள அண்ணா!

இன்றைய மலையகம் சுமார் 175 வருடங்களைத் தாண்டிவிட்ட போதிலும் இன்னும் மலையக மக்களின் சோகங்கள், துன்பங்கள், வாழ்க்கைப் பிரச்சினைகள் மட்டும் தீர்ந்ததாகத் தெரியவில்லை! கூலிப்பட்டாளங்களாக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள். தங்களின் அயராத உழைப்பினால். கொடிய மிருகங்கள், நோய்கள், வறுமை இவற்றுக்கு மத்தியில் வியர்வை சிந்த உடலை வருத்தி உழைத்துக் கொடுத்த போதிலும் அவர்களின் வாழ்வு மட்டும் மலர்ந்ததாகத் தெரியவில்லை. அன்று அந்நியர் ஆட்சியின் போது காணப்பட்ட அடிமைத்தனமே இன்னும் தலைவிரித்தாடுகிறது.

இந்த வரைவிளக்கணத்தைக் கொண்ட மலையக மக்களின் பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கும் ஒரு படியாகவே இலங்கை – இந்திய ஒப்பந்தமும் அமைந்துள்ளது என்றே கூறவேண்டியுள்ளது. ஒன்று வந்த நாட்டில் சுதந்திரமாக வாழவேண்டும். அல்லது சென்ற நாட்டில் சுபிட்சமான வாழ்க்கை அமைய வேண்டும். இந்த இரண்டும் கெட்டான் நிலையிலேயே தாயகம் திரும்பிக்கொண்டிருக்கும் அநேகர் அல்லற்படுகின்றனர். இந்திய வம்சாவளியினரின் பிரச்சினைகளைத் தீர்த்து இரு நாடுகளுக்கும் நன்மையளிக்கும் நோக்குடன் இவ் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட போதிலும் இதன் மூலம் இந்தியா திரும்புபவர்கள் பல துன்பங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. வாழ்க்கை நடத்தி வந்த மண்ணில் எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்தும் அவற்றை ஓரளவுக்கு மறந்து தாய்த்திரு நாட்டிலாவது தன்மானத்துடன் வாழலாமென்றால் அங்கும் இதே நாடகமாகத்தான் உள்ளது.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் புனர்வாழ்வுத் திட்டங்களை நம்பி தாயகம் திரும்புவோரின் பிரச்சினைகளைத் தீர்க்க அவ்வப்போது பல இயக்கங்கள் கூட முன்வந்து அவற்றை பூர்த்திசெய்ய ஆவன செய்து வருகின்ற போதிலும் அவையும் பூரண திருப்திகரமானதாக அமையாமை மிகவும் வருந்தத்தக்கதாகும். அதுமட்டுமல்ல இன்னும் தாயகம் திரும்பவுள்ள பிரசைகளிடம் ஒரு வெறுப்புணர்ச்சியையும், பய உணர்வையும் ஏற்படுத்திவிடத் தவறவில்லை. இதனால் எங்கு சென்றாலும் கஸ்டத்தால் சூழ்ந்த வாழ்வையே மேற்கொள்ள வேண்டியவர்களாக இவர்கள் காணப்படுகிறார்கள்.

மன்னாரிலிருந்து புறப்பட்டு இவர்கள் இராமேஸ்வரத்தில் காலடி எடுத்து வைத்ததும் முதன் முதலாக இவர்களுக்கு " அகதிகள் " என்ற புனைப்பெயர் சூட்டப்படுகிறது. சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இவர்கள் கௌரவமுள்ள இந்தியப் பிரஜைகளாக நாடு

## விழிப்புணர்ச்சி விரிய வேண்டும்

வேகம் வேகம்
யந்திர வேகம்;
வேகம் இன்னும் கூறப்போனால்
வெடிப்பு நிகழும் ஒருநாள் போதில்!

ஓட்டம், ஓட்டம்
கனகதி ஓட்டம்;
கல்லூரி - வீடு - டியூட்டரி என்று
கலந்து போகும் படிப்பு எல்லாம்!

ஐந்து வருடம்
ஐயாயிரம் செலவு;
வந்த மறு மொழியில்
வாசிற்றி கிடைக்கவில்லை!

பாட்டு ஆட்டம்
பலவித நாட்டம்;
எலிபன்ட் பொட்டம் வீதி கூட்டும்
பொம்பொம் பாட்டு தெருவைக் கூட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிய போதிலும், இந்திய அதிகாரிகளும் மக்களும் இவர்களை அகதிகளாக எடைபோட்டு சொல்லொண்ணுத்துன்பத்தில் ஆழ்த்துகின்றனர்.

இலங்கையிலேயே பிறந்து நிதமும் தேயிலை மலையையே பார்த்துப் பழகிய; ஒரு வட்டத்துக்குள்ளேயே வாழ்ந்து வந்தவர்கள் மலையக மக்கள். இந்தியா திரும்பிய இவர்கள் அங்கே புதிய சூழலில் வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகின்றனர். ஆரம்பத்தில் தமிழ்நாட்டில் மட்டும் புனர்வாழ்வுத் திட்டங்கள் மூலம் குடியேற்றப்பட்ட இவர்கள் தற்போது கர்நாடகம், ஆந்திரா, கேரள மாநிலங்களிலும் குடியமர்த்தப்படுகின்றனர். இப்பகுதியில் காலநிலை, சுற்றுப்புறங்கள் புதிய சூழ்நிலையை உண்டாக்குவதுடன், தமிழ் மொழியில்லாது வேற்று மொழி பேசுவோர் மத்தியில் வாழ இவர்கள் விரும்பாதபோதிலும் கட்டாயப் படுத்தப்படுகின்றனர்.

இம் மக்களின் அநேகர் சுய வேலை வாய்ப்புத்திட்டத்தின் அடிப்படையில் குடியேறுபவர்களாக உள்ளனர். வியாபாரம் செய்வதற்காக கடன் வழங்கப்படுகிறது. சிலர் அரசாங்கப் பண்ணைகளில் வேலைபெற்றுச் செல்கின்றனர்; மற்றும் பலர் நீலகிரி மாவட்டத்திலுள்ள தேயிலைத் தோட்டங்களில் கூலிவேலை செய்ய அனுப்பப்படுகின்றனர். அநேகர் புதிய காட்டு நிலங்களிலும், பின் தங்கிய மாவட்டங்களில் இதுவரையும் பயன்படுத்தப்படாத நிலங்களில் வரட்சியான பகுதியில் குடியேற்றப்படுகின்றனர். இவர்களுக்கு கடன் என்ற பெயரில் ஒரு

# மலர்வதெப்போ?

சிறிய தொகை வழங்கப்பட்டாலும், அதன் மூலம் அவர்கள் உண்மையான, நிம்மதியான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியாமல் போகிறது. அரசாங்கம் கடனுக வழங்கும் பணத்தில் ஒரு சிறு பகுதியே வழங்கப்படுகிறது. இலங்கையில் வாழும் போது அன்றாடம் வேலை செய்து மாதத்தில் ஒரு நாள் மொத்தச் சம்பளம் பெற்று சீவியம் நடத்தி வந்த இவர்கள் தாயகத்தில் அன்றாட தினக் கூலிகளாக பெரும் இன்னல்களுக்குள்ளாகின்றனர். இவர்களுக்கெதிரான அநீதிகளை மாற்றி புதுவாழ்வு கொடுக்க எவருமே முன்வராமல் இருப்பது கவலைக்கிடமாகும்.

அன்று விலைவாசிகள் குறைந்து காணப்பட்டபோது எவ்வாறு நிவாரணம் அளிக்கப்பட்டதோ, அதே முறையே இன்றும் கடைப்பிடிக்கப்படுகிறது. சம்பளத் தொகை, வீடுகட்ட உதவித் தொகை, வியாபாரம் செய்ய கடன் போன்றவை போதியதாக இல்லாமல் பற்றுக்குறையாக வழங்கப்படுகிறது. மொத்தத்தில் புனர்வாழ்வு என்ற பெயருக்கே அர்த்தமில்லாததாக இவர்களின் அனைத்து செயல்களும் காட்சியளிக்கின்றன.

ஒப்பந்தம் என்ற பெயரில் இருநாட்டு அரசும் ஆடம்பரமான, கவர்ச்சியான செயற்திட்டங்களையும், வாக்குறுதிகளையும் ஏட்டிலும் வாய்ப்பேச்சிலும் மட்டும் காட்டிவிட்டின. ஆனல் அதன்மூலம் அனுபவப்படும் மக்கள் அடையும் இன்னல்களை எவரும் கண்டு நிவாரணம் வழங்குவதாக இல்லை. ஏமாற்றப்பட்ட இவர்களின் வாழ்வே சூனியமாவதாக காட்சியளிக்கின்றது.

இதுபோன்ற எத்தனையோ பிரச்சினைகளை தாயகம் திரும்புவோர் தினந்தோறும் அனுபவித்து வருகின்றனர். அவர்களின் பிரச்சினைகள், அவலங்கள் எண்ணற்றவை. எழுத்தில் அடங்க முடியாதவை. அவர்களின் உள்ளக் குமுறல்களையும், திக்கற்றவர்களின் பிரச்சினைகளையும் தீர்த்துவைப்பதில் தமிழ்நாடு அரசு தக்க கவனம் செலுத்தவேண்டியது அவசியம். புனர்வாழ்வு பெறச் செல்லும் மக்களின் விடயங்களில் இந்திய அதிகாரிகளும். பொது மக்களும், சமூக சேவை இயக்கங்களும் சட்டரீதியாக மட்டுமன்றி, மனிதாபிமானத்துடனும் அணுகி அம்மக்களின் வாழ்வில் ஒளி பெற வழியமைப்பார்களா?

அன்புத் தம்பி

**எஸ். கே. ராஜரெத்தினம்.**

---

வேலை இல்லை
சோலி வேணுமே......
அம்மனைச் சந்தி சுற்றி
ஐந்து முறை உலாக்கோலம்!

காலை, மாலை
கடற்கரை சினிமா......
சீப்புக் காணுத் தலைக்கோலம்;
சைக்கிள் மேலே திருக்கோலம்!

சைக்கிள்களின் அணிவகுப்பு......
தெருவெல்லாம் கதவடைப்பு......
மச்சான் தோளில் கைபோட்டு
மலர் விழிக்கு ஒரு 'ஹின்'ரடிப்பு!

வீட்டில் யாரும்
தட்டிக் கேட்டால்
பொலிடோல் போத்தல் தலைகாட்டும்;
பயமுறுத்தல் பணிய வைக்கும்;

கல்லூரி வருகின்ற
கணித ஆசிரியர்
கணக்கு விளங்கும், டியூசனில் என்ருல்......
காணுகின்ற முடிவிதுதானே!

**கோகிலா மகேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகை விரும்பும் மனிதன்!

முருகன் என்றால் அழகன் என்று பொருள்

இறைவனைக்கூட அழகன் என்று சொல்லிக் கொள்வதில் ஆசைப்படுகிறான் மனிதன்.

உண்பது உடுப்பது. எடுப்பது - ஏற்பது- சகலதிலும் அழகு தவழ ஆவல் கொள்கிறான் மனிதன்.

ஆணையோ பெண்ணையே எடுத்த எடுப்பில் கவர்ந்து கொள்வது அழகு. அதன் பின்பு தான் சாதி - சமயம் – சீதனம் – சீர் வரிசை!

பல ரூபாய் வருமானம் தரும் காய்கறி வகைகளை மறைவிடத்தில் - வீட்டின் பின்புறத்தில் நடுகிறான். ஒரு சதமும் பிரயோசனம் அற்ற குரோட்டனையும் அசோக் மரங்களையும் வீட்டின் முன் புறத்தில் நடுகிறான். காரணம் அழகு.

அழகை ரசியாத மனிதனுமில்லை: தான் அழகாயிருப்பதை வெறுக்கின்ற மனிதனுமில்லை. முற்றும் துறந்து காவியுடைதரித்த சுவாமிகள் வசிக்கும் இராமகிருஸ்ண மிசனில் கூட முன்னால் பல வர்ண பூச்செடிகள் நடப்பட்டிருக்கிறதே. ஏன் அழகு.

இதனால் தான் பாரதிதாசன் கூடப் பாடினான் ''அழகுதனைக் கண்டேன்; நல் இன்பம் கொண்டேன்'' என்று.

பூ என்றாலும் சரி, பூனை என்றாலும் சரி; பெண் என்றாலும் சரி, மண் என்றாலும் சரி அழகாயிருக்கிற எந்தப் பொருளையும் அள்ளி அணைப்பதில் இன்பம் கொளகிறான் மனிதன். அது மனித சுபாவம்.

எனவேதான் அழகான ஒரு பெண்ணைக் கண்டால் அதன்மீது ஆசை கொள்கிறான். இப்படியான ஒரு பெண் எனக்கு கிடையாதா என்று சிலவேளை ஏங்குபவனும் அவனே!

அந்த அழகு நெஞ்சில் பதிந்து கொண்டால் - அதனால் உருவாகும் காதல் நெஞ்சில் நிலைத்துவிட்டால் பின்பு அதற்காக அவன் எதுவும் செய்வான்.

ஒரு பெண்ணுக்காக ஒரு பெரிய தாஜ் மஹாலையே கட்டவில்லையா ஒரு ஜய்யாஹான ஒரு பெண்ணுக்காக அரச பதவியையே துறக்க வில்லையா ஒரு கிளஸ்ரர் கோமகன், ஏன்?

''தேனை மறந்திருக்கும் வண்டும் – ஒளிச்
சிறுப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும் – இந்த
வைய முழுதுமில்லை தோழி'' என்று

புரட்சிக் கவி பாரதிதாசன் சும்மாவா பாடினான்.

ஒரு பூ மலர்ந்தால் ஒரு அழகு. பின்பு அது காற்றில் அசைகையில் ஒரு அழகு. அதன் மீது வண்டு வந்து அமர்கையில் அது ஒரு தனி அழகு!

ஒரு பெண் சிரிப்பது ஒரு அழகு – நடப்பது ஒரு அழகு - கடைக்கண்ணால் பார்த்து நாணப் படுவது ஒரு தனி அழகு!

''அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள். என்றார் கம்பர். ஏன் அந்தக் கடைக்கண் பார்வையை கம்பர் மிக நன்றாகச் சுவைத்திருக்கிறார்,

''பாடம் படித்து நிமிர்ந்த விழி – தனில்
பட்டுத் தெறித்தது மானின் விழி'' என்

றானே புரட்சிக்கவி பாரதிதாசன். ஏன்? அவன் கவிஞன் அழகை ரசித்தவன்.

இவர்களுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முந்திய வள்ளுவர் கூட சும்மாவா விட்டார்.

''கண் களவு கொள்ளும் சிறு நோக்கும்
காமத்தில்
செண்பகம் அன்று பெரிது'' என்றாரே!

அழகைப் பாடாத கவிஞன் இல்லை. அழகை ரசிக்காத மனிதனில்லை.

ஒரு ஆணின் முன்னால் பெண்ணும் ஒரு பெண்ணின் முன்னால் ஆணும் அழகாய் இருப்பதையே விரும்புகிறார்கள். இதற்காகச் செலவிடும் அழகு சாதனங்கள் பல.

உண்மையில் முகம் அழகாயிருக்க வேண்டுமானால் அகம் அழகாயிருக்க வேண்டும். அகம் அழகாயிருப்பதற்கு - சிந்தனைகள் - செயல்கள்- ஆற்றும் கருமங்கள் அனைத்திலும் தூய்மை இருக்க வேண்டும் - அதன் மத்தியில் உருவாகும் அழகுதான் அழகு.

பூச்சி - புழு - விசக்கிருமிகள் நிறைந்த சேற்றில் உருவாகும் செந்தாமரை எப்படி செழிப்பாக வளரும் - அதில் எப்படி அழகு உருவாகும்.

— சி. சங்கரப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UDAYA MOTORS

- ✲ MOTOR ENGINEERS &
- ✲ BODY BUILDERS
- ✲ SPECIALISTS IN LATHE WORK
- ✲ AGENT FOR MERCANTILE CREDIT LTD.
- ✲ FINANCING CARS & LORRIES
- ✲ SUPPLIERS OF ALL KINDS OF BUILDING MATERIALS
- ✲ TRANSPORT AGENT & BUILDING CONTRACTOR

*Visit*

V

*Udaga Metal Distributors*
No. 54, Baily Road,
BATTICALOA.

*Udaya Motors*
No. 40, New Road,
BATTICALOA.

*Proprietor:* **V. V. KARUNARATNA**

T'Phone: 2565.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BALA'S GROUP

*Dealer in :*

SAWN TIMBER DOOR FRAME, WINDOW FRAME
QUALITY FURNITURE AND GOVERNMENT
CONTRACTORS & SUPPLIERS

Work Shop:

**MAIN ROAD, – ERAVUR.**

# பாலாஸ் குரூப்

## நியாயமான விலை!

## உறுதியான வேலைப்பாடு!!

**சகல விதமான:**

கதவு நிலைகள், கதவுகள்
யன்னல் நிலைகள் யன்னல்கள்
நவநாகரீக வீட்டுத் தளபாடங்கள்
வீட்டுக் கூரை வேலைகளுக்கு
உகந்த அரிந்த மரங்கள்
பலகை வகைகளுக்கு

இன்றே விஜயஞ் செய்யுங்கள்.

## பாலாஸ் குரூப்

**14, பிரதான வீதி,**
**செங்கலடி.**

தொ. பேசி: **7390**



இப்பத்திரிகை மட்டக்களப்பு கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு, 41, பயனியர் வீதி, மட்டக்களப்பிலிருந்து வெளியிடப்பட்டது. ஆசிரியர்கள்: சி. சங்கரப்பிள்ளை, கௌரவ ஆசிரியர் Dr. இ. மதனகோபாலன். ஆசிரியர் குழு: கண மகேஸ்வரன், இந்திராணி தாமோதரம் பிள்ளை, பாண்டியூர் தட்சணு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org